A

உ

பராசக்திதுணை

4 - OCT 1924



Accn. No. 183686
Pages 60

அருப்புக்கோட்டையென்னும் திருநலலூர்

# வாழவந்தம்மை

# பிள்ளைத் தமிழ்.

எட்டயபுரம் சமஸ்த்தானவித்வான்

**மு. நாகூர் முத்துப்புலவர்**

அவர்களால், இயற்றப்பெற்று

மதுரை மதுராம்பிகை அச்சியந்திரசாலையில்,

அச்சிடப்பெற்றது

இரத்தாக்ஷி ஆவணி மீ

1924

ஓம்.

# முகவுரை.

---

பிள்ளைத் தமிழ் என்பது, தமிழ்மொழிக்குரிய தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களுள் ஒன்று, பிள்ளைக் கவியென்றுங்கூறுப. இதனுள் ஆண்பாற் பிள்ளைக்கவி, பெண்பாற் பிள்ளைக்கவி யென இருவகைத்து. அவற்றுள், இஃது பெண்பாற் பிள்ளைக்கவியாம். பிறந்த மூன்றாமாத முதல், இருபத்தொராராமாதம்வரை, ஒற்றித்த மாதங்களினும், ஐந்தாம் ஏழாம்ஆண்டுகளினும், காப்புப் பருவ முதல் ஊசற் பருவம்வரை,முறையே பாட்டுடைத் தலைவியைக் கேட்பித்தலாகும்.

வாழவந்தம்மை பிள்ளைத்தமிழ் என்பது, திருநல்லூரிற் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும், பராசத்தியாகிய வாழவந்தம்மைமீது எட்டயபுரம் சமஸ்த்தான வித்வானும், யோகிப்பண்டார மரபினருமாகிய நாகூர்முத்துப் புலவர் இயற்றியது. திருநல்லூர் என்பது, பாண்டிவள நாட்டிலே, தேவாரம் பெற்ற திருப்பதிகளுள் ஒன்றான, திருச்சுழிகை யென்னும் சிவாலயத்திற்கு, ஐந்து கடிகை தூரத்திற்கு மேற்குப் புறத்திலுள்ள, அருப்புக் கோட்டை யென்னும் பெயரிய பெரிய நகரமாகும், இத்தலத்திற்கு, வேறு தெய்வ பரமாகப் பற்பல புலவர்கள் செய்துள்ள, அநேக பிரபந்தங்களும் உள்ளன.

எட்டயபுரத்தில், நாகூர் முத்துப் புலவரென ஒரு பிரபல வித்வான் பல்லாண்டு கட்கு முன்னர் இருந்ததுண்மையாகலின், இந்நூலியற்றியார், அவ்வாதி நாகூர் முத்துப் புலவரோ வெனப் பிற்காலத்தவர் ஐயுறற்கிடனுமன்றே, ஆதலான், இந்நூலாசிரியரை வேறு பிரித்துக் காட்டல், அத்யாவசியகமாகின்றது. சற்றேறகுறைய 120 வருடங்களுக்குமுன் எட்டயபுரத்திலிருந்து இந்நூலாசிரியரின் முன்னோர்களில் ஒருவர், அறிவறிந்த மக்கட்பேற்றை அடையவிரும்பி தம்மனைக்கிழத்தியாரிருவருடன் பற்பலதேவகுலங்களைத் தெரிசிப்பான் சென்று,சோணாட்டு நாகூரில் சின்னாள் தங்கி அவ்வாண்டவரை உபாவித்துக் கொண்டிருந்தனர். அவ்விதம் இருக்கும் போழ்து, ஓர் நாளிரவு கனவில் சந்நியாசி ஒருவர் தோன்றி, இரண்டு முத்துக்களை

கையில் கொடுத்து மறைந்ததாக கண்டு, உவகைபூத்து திருவருள் கிடைத்ததென்றெண்ணி பிரார்த்தித்து, உடனே தமதூருக்கு வந்து சேர்ந்தனர். வந்தது முதல், மனைவியரிருவரும் வயிறு வாய்த்திருந்து நல்ல சுபதினத்தில் மூத்தாள் ஆண்சிசுவையும், இளையாள் பெண்சிசுவையும் ஈன்றனர். பின்னர் அப்புலவர் தமது குடும்பத்தோடு மீட்டும் நாகூருக்குப்போய், ஆண்டவர் சந்நிதியில் முன்னர்க்கோரியிருந்தபடி, மக்களுக்கு முறையே நாகூர்முத்து, முத்தம்மாள், என்ற பெயர் புனைந்து வழிப்பட்டு வந்தனர். அன்றுமுதல் அவர் சந்ததியினரனைவருக்கும், அப்பெயரே அமைந்துகிடக்கின்றதென இச்சரித்திரக் குறிப்பு, நூலாசிரியரின் பிதாமகரான நாகூர் முத்துப்புலவராலும், பிறமுதியோர்களாலும், தெரிந்தெழுதலாயிற்று. இதனைத் தனிச்செய்யுட் சிந்தாமணி தொகுத்த மு ரா. கந்தசாமிக் கவிராயர், 200 வருடங்களுக்கு முன்னிருந்த கடிகை முத்துப்புலவரோடு, நாகூர் முத்துப்புலவர் ஒருங்கிருந்தனரெனவும், ஓர் நூலும் பாடிற்றிலர் எனவும், அறியாது கூறிப்போயினர். அவ்வாதி நாகூர் முத்துப்புலவர் சமஸ்த்தான ஆதீன கர்த்தரவர்களாகிய வெங்கடேசுர எட்டப்ப மகாராஜா, குமார எட்டப்ப மகாராஜா இவர்கள்பேரில், கற்பனாலங்காரம் அமைந்த அளவிறந்த கட்டளைக் கலித்துறைகள், இளசைப் பள்ளு, இன்பசையோக ரசமஞ்சரி, சண்டைக்குறவஞ்சி, பெரிய வண்ணம், சந்தவிருத்தங்கள் இயற்றப்பெற்று (தம்மைப் பாடுந்தமிழ் வாக்கால் மற்றொருவர் தம்மைப் பாடத்தகாதெனவே) தலைக்காட்டுப் புரங்கிராமத்தில் சர்வமானியமாக நிலங்கள் விட்டுக்கொடுத்து, அவ்வப்போதுதக்க சன்மானங்களும்தந்து அவ்வதிபர்களால் தங்கள் சமஸ்த்தான வித்வானாகு, கௌரவத்துடன் ஆதரிக்கப்பட்டு வந்திருக்கின்றனர். மேற்கூறிய மானியங்களை அவர் சந்ததியினரான இந்நூலாசிரியர் இன்றும் அனுபவித்து வருவதோடு, இப்பொழுது அரசு புரியும் ஸ்ரீமான் வெங்கடேசுர எட்டப்ப மகாராஜா அவர்கள் அபிமானசொந்த வித்வானுகவும் இருந்து வருகின்றனர்.

கலியுக வரதியாகிய வாழவந்தம்மையை வழிபடும் அன்பர்களெல்லாம், வேண்டுப வேண்டியாங் கெய்தும் உண்மையினையும் அம்பிகையின் தெய்வீக சித்தியினையும் நாளுளும் கண்டு கேட்டுணர்ந்; கோவில் அக்ஷாரும இந்நூலாசிரியரின் சொந்த மாதுலருமாகி திரு

மான வாழவந்தப் புலவரவர்கள் விருப்பத்தின்படி, நூலாசிரியர் அன்புமிக்கு இப்பிள்ளைத் தமிழைச் சில ஆண்டுகட்கு முன்னர் இயற்றிப் படித்து வந்தனர். அதனைத் திருநல்லூர் வடுக கோட்டையில் வசிப்பவரும் செல்வத்திலும் கொடையிலும் சிறந்தவருமான, தமிழருமை யறிந்த கனம் பொருந்திய கிச்சம நாயக்கரவர்கள், வாழவந்தம்மை திருச்சந்நிதியில் வைத்தரங்கேற்றும்படி செய்து, இந்நூலை அச்சியற்றுமாறு பொருளுதவியும் செய்தார்கள். நமது நாயக்கரவர்களுக்கு நீண்ட ஆயுளையும் சற் புத்திர பாக்கியத்தையும், என்றும் குறையாதசெல்வத்தையும், பிற எல்லா நலங்களையும் கொடுத்தருளும் வண்ணம் வாழவந்தம்மையைப் பிரார்த்திக்கின்றோம்

நிற்க, இந்நூல் பெரும்பாலும் தோத்திரவடிவச் செய்யுட்களால் யாக்கப்பெற்று, இடையிடையே பற்பல சந்த வேற்றுமை நயங்களையுந்தழுவிஉவமைமுதலிய பல அலங்காரங்களையுந்தன்னுட் கொண்டு, படிப்பவர்க்கின்பம் பயக்குந்திறத்த தாயமைந்திருக்கின்றது. வட சொற்கள் பலவிரவியிருப்பினும், அவைகள் ஆன்றோர்களாற்றமிழ்ச் செய்யுட்களில் எடுத்தாளப் பட்டவைகளாகவே தோன்றுகின்றன. இஃதை அரங்கேற்றி வருங் காலத்தோர் நாள், காப்புப் பருவத்தில், நல்லை நகர்க் கரசியென வந்திருப்பதை அங்குள்ளார்களில் ஒருவர், "கிராம தேவதையாகிய வாழவந்தம்மை அரசியாவதெங்ஙனம்" எனக்கடா விடுத்தனராக; நூலாசிரியர்சர்வலோகேக நாயகியானஅம்பிகையை நல்லைநகர்க்கரசி யென்பதாற்படும் இழுக்கென்னை எனவிடையிறுத்தாராகவும், ஆசங்கித்த புலவர் கனவில் அன்றிரவு வாழவந்தம்மை ஓர் அரசிளங்கன்னியாகிச் சேவைதந்து புன்முறுவல் கோட்டி திருவுருக்கரந்தனராம், இவ்வுண்மை அரங்கேற்றவைக்களத்தகத்தே மேற்கூறிய அன்பரால் வெளிப்படுத்தப்பட்டதென்ப. எனின், இந்நூலின் பெருமையை வேறுவகையில் மேன்மைப் படுத்திக் கூறுதன் மிகையென்பது எமது துணிபு.

தொன்மைத் தமிழ்ப் புலவரும், சைவ சமயப் பற்றினருமாகிய இந்நூலாசிரியர், எல்லாப்பேறும் பெற்று நீடுவாழ்க.

முத்துச்செல்லையாபுரம்
16—8—24.

சங்கமுத்து.

## அவையடக்கம்.

வெள்ளத் தமுது மிதற்கிணையா
விள்ளத் தகுமோ வெனவெவரும்
விரும்பித் துதித்துக் களிகூர்ந்தெவ்
வேளை தனிலுஞ் சிரமீது
கொள்ளத் தகுந்த வருட்கவிதை
கொழிக்குங்குமர குருபரனுங்
கோலப் புனித வாரிதியுங்
குலவு சிவஞானக் கொழுந்தாம்
வள்ளற் பெரியோ னுந்திருவாய்
மலர்ந்த தமிழ்ப்பா மாலைபுனை
வரத கவுரி திருநல்லை வாழவந்த
மனோன்மணிமேற்
பிள்ளைத் தமிழீ தொருசிறிய
பிள்ளைத் தமிழாமெனவறிஞர்
பேச வடியேன் பேசலுற்றேன்
பிழைகள் பொறுத்தாட் கொள்வீரே.

### வேறு.

நம்மையென்று மாதரித்தே வேட்டனவெ லாந
மருளு நற்குயான
அம்மையுமை வாழவந்தா ளினியபிள்ளைத் த
மிழைமிகவன்பினோடு
கம்மவார் குலதிலகன் கிச்சமத யாளனெனுங்
கனவான்றாய
செம்மையுறு திருமனத்தா னரங்கேற்று வித்
தச்சிற் றிகழ்வித்தானே

உ

பராசக்தி துணை.

# ஸ்ரீ வாழவந்தம்மை பிள்ளைத்தமிழ்.

## தாதங்குள விநாயகர் வணக்கம்.

### ஆசிரிய விருத்தம்.

சீர்கொண்ட சுவணநவ மணிமுடிவி ளங்கவிரு
செவிமணிக் குழையிலங்கத்
திருநுதலி னடுவிலிடு சிந்தூரத் திலகமொடு
திரிபுண்ட ரந்துலங்கப்
பார்கொண்ட தாதங்கு ளக்கரைக் கோயிலிற்
பண்புடன மர்ந்துகருணை
பாலிக்கு மத்திமுக வித்தகமு தற்கடவுள்
பதமலர்த லைக்கணிகுவாம்
ஏர்கொண்ட சாமளசொ ரூபிசுந் தரவல்லி
யினியதே னனையசொல்லி
இன்பநா யகிசுயஞ் சோதியா தியுமாகி
யெங்கணு நிறைந்த வொன்றும்
வார்கொண்ட கங்கைதவ ழுஞ்சடா மவுலியர்
மகிழ்ந்தார்வ முறவவர்க்கே
வாழவந் தாணல்லை வாழவந்தா ள்கவிதை
வளரவருள் புரிக வென்றே

---

## காப்புப் பருவம்.

### திருமால்.

பூவார்ந்த செங்கையப யங்காட்ட வயிலினைப்
பொருவும்விழி கருணைகாட்டப்
புன்னகையெ ழிற்குமுத வாய்காட்ட வொளிர்முகம்
பூரணவெணிலவு காட்டப்
பாவார்ந்த சதுமறைக ளிசைகாட்ட மதிகாட்டு
படர்சடைப் பரனிடத்துப்
பசும்பேட்டி ளங்கிள்ளை வாழவந் தம்மையெம்
பார்ப்பதியை யினிதுகாக்க

தேவார்ந்த மாமிபாற் றிகழ்பணு டவியராச்
செய்யமணி யணைமீதிலே

திருமாத ரம்பைநிகர் வாமமே தாங்கச்
சிரங்கொண்டு நீலமலைமே ரான்

மாவார்ந்த பார்மங்கை யுபயசீ ரடிவருட
வண்டுழாய் மார்பிலங்க

மன்னுயிர்பு ரந்தென் றுமறிதுயில மர்ந்தருளு
மங்கலச் செங்கண்மாலே (1)

---

## சிவபெருமான்.

சீலரன்பர்பரி பாலரந்திவணர் சேவை கொண்டருளு
மற்புதக் காட்சியர்

சேய சந்திர னு லாவுசெஞ்சடிலர் சேருமந்த்ரரக
மொப்புநட் பாட்சியர்

சீர்மிகுந்தவிடை யேறுகந்த சிவ தேவர்தென்கயிலை
தற்கிருப் பாக்கினர்

சிதவம்புய னு மா லு மன்றுநிலை தேட நின்றபரர்
சிற்சபைத் தூக்கினர்

கோல வம்புயர்ச லாப சம்பிரமர் கோளெறும் பிதண
தட்டனைப் போர்த்தவர்

கோன்மை தங்கியத யாளர் மிஞ்சிவரு கோர நஞ்சினைமி
டற்றினிற் சேர்த்தவர்

கூடி யெங்குமொளி யாய்நி றைந்தவரர் கோளவண்டவுல
கத்தினைக் காத்தவர்

கோரிடும்பதச ரோருகங்க டுதி கூறிநந்தமது
சித்தம்வைத் தேத்துதும்

சூலியங்கரக பாலியெண்டொகைகொ டோளியந்தரிவ
ரத்தலர்ப் பூத்தவள்

தூபசுந்தரமு காரவிந்தமுறு தோகையம்பிகைசு
வுத்தமப் பார்ப்பதி

சோதிமங்கல கல்யாணிகொங்கவிழ் துழாயலங்கல்புனை
பொற்குடத் தாட்டினன்

தோமிறங்கையபி ராமிசங்கரிசு வாகதந்தருசொல்
விந்தகச் சீர்த்தியள்

மாலையங்குழலி ஞாலமும்பர்தொழும் வாழ்வுதந்தெனத
கத்திடர்த் தீர்த்தவள்

வாசகுங்கும படீரகொங்கைமலை மாதுதொண்டர்கண்ம
னத்திடத் தேற்றவள்

மானைவென்றவிழி மானியன்றவனெ மானிடங்குலவு
பக்குவக் காப்பினள்

மாவளம்பெறுந லூரமர்ந்ததிருவாழவந்தவளை
யற்பினிற் காக்கவே. (2)

---

சுந்தரவிநாயகர்.

சங்கரச தாசிவர் மகிழ்ந்த மகவாகினவர்
தனிநற் பதத்தினர்

சஞ்சிதவி நாசரெழி லங்கர விநோதர்தமை
தழைசற் குணத்தினர்

தந்திமுக மாமிருத னங்கமுலை வாகவட
றருமற் புயத்தினர்

தஞ்சமெனை யாள்வரத வென்றவர்க டயவினை
தளரச் செகுத்தவர்

அங்கணர்ம தாசலமு கங்கொளவ தாரருமை
யவண்மெய்த் தவத்தினர்

அன்பருப காரரிரு மங்கையர்ம ணாளர்பொடி
யணிபொற் புரத்தினர்

அஞ்சொலிசை மேகமென வுந்துதிகள்பாடவல
வருளெற் களிப்பவர்

அம்புவிமு ளுகவரு சுந்தரக ணேசர்மல
ரடியைப் பழிச்சுதும்

இலங்கணா வார்கடக கங்கணிம ராளநடை
விசயப் பெருக்கினள்

விந்தகன பாரமயி லம்பிகை மகாவரதி
விமலற் குவப்பினள்

விஞ்சைபயி லாரணிமி ரந்தரிப வானியுயர்
வெளிவெற் பிருப்பவள்

வெண்டாள வாணகைத லங்கியொளி ரானனமின்
விடைபெற் றுகைத்தவள்

மங்கலம னோன்மணிம தங்கிமக மாதிமைய
மலைபெற்ற வுத்தமி

மஞ்சுறழ்வி லோதியிள வஞ்சிகவு மாரியறம்
வளரப் பரிப்பவள்

மன்றினாட மாடிறைவர் பங்கி லுறை தேவியரு
மறை சொற்ற பெற்றியள்

வண்டடரு யானநலை வந்தவபி ராமிதிரு
மகளைப் புரக்கவே. (3)

---

## மாப்பிள்ளை விநாயகர்.

பொன்னரங் காகவெழி லார்கவுத் துவமணி
புனைந்துள பங்கமழ்ந்து

போரிரா வணாரு டன்பொருது விசயம்
பொருந்துகம் பீரமார்பா

தென்னரங் காவென்ன வடியர்புகழ் மாறனது
சேனைகா வலனடத்தைச்

செய்யவொரு சக்கரம தைப்பரிசெ னத்தந்த
சீர்மைமிகு கருணைவள்ளால்

முன்னர்ங் கார்வமொடு மூவர்மொழி திருமுறையை
மூதறிவி னம்பியாற்றும்

மோனநிட் டைக்கெளிய னாகியுல குய்யவருண்
முழுமுதற் கடவுள்மணியே.

பின்னரங் காயமணி மண்டபத் தின்புற
விளங்குமாப் பிள்ளைவரத

விநாயகப் பெருமானை யுமைவாழ வந்தவளை
வேண்டிப் புரந்திடுகவே. (4)

---

## பாலசுப்பிரமணியர்.

மட்டுலா நீபமலர் மாலிகா பரணனெழின்
மருவுகலி யுகவரதனும்
மரகதக லாபமயி லேறிவடி வேற்படைகொள்
வரசடாக் கரசொரூபன்
கட்டுலா வினியசெந் தமிழ்மாலை யன்பொடுங்
கழலிணைத னிற்சூட்டுவோர்
கமலவித யத்திலுறை பாலசுப் பிரமணிய
கர்த்தனு ரினிதுகாக்க
பட்டுலா வரியநுணி டைச்சிமா தரிவீரி
பவளவா யனநடைச்சி
பண்ணம்ப ணத்திசா முண்டிசாம் பவிகவுரி
படவரவ கங்கணத்தி
வட்டுலா வியகொங்கை மடமங்கை திருநல்லை
மாநகர்க் கரசியான
வாழவந் தாளடிகள்சூழவந் தருள்புரியும்
வல்லியரன் மெல்லிதனையே. (5)

---

## தேவேந்திரன்.

வண்டாட லங்கலணி கொண்டைவெண் டரளநகை
மாதுசசி போகமேவும்
மங்களகல் யாணனை யைந்தருவி னீழலுண்
மகிழ்ந்தும்பர் கட்கிறைவனைக்
கொண்டாட வயிராவத ங்களிற் றுலவிவரு
கோலசிங் காரபுருடன்
கொற்றமிகு மயின்மருவு குலிசாயு தங்கையிற்
கொண்டகோ பதிகாக்கவே
கண்டாடு மொழிமாதர் மாடமிசை யியன்மணங்
கமழ்குழல்வ கிர்ந்துலர்த்தும்
கரியபரி மளவகிற் புகைசேர மயிலினங்
காரென்ன வேயவாவிக்

கண்டாடு சோலைசூழ் நல்லைமா நகராசி
கருதுதன தடியர் கட்கே
கதியருட் பதமுதவு வாழவந் தவளெனுங்
காரணியை நாரணியையே. (6)

---

## திருமகள்.

முத்தினம ணிக்குவை கொழிக்குந்த ரங்கநிறை
முந்நீர்த ழீஇங்கொளுலகம்
முழுதுமுள சரமசர மியாவும் பயந்தபினு
முகிழ்முலைக் கன்னியான
சித்திரசொ ரூபமே பெற்றிளம் பெண்ணாத்
திகழ்ந்திறைவர் பாகமகலாச்
சின்மயா னந்தநிலை வாழவந் தவளான
திரிசூலி யைக்காக்கவே
சத்திக்கு மென்றொடிய ணங்காம லைக்கட
றழைத்தெடுத் தார்வமோங்கு
சர்வபரி பூரணியு லாசசல் லாபமிகு
தற்பரசு காதீதனும்
முத்திக்கு வித்தான சுத்தன்மணி மார்பகமு
மூசுவரி முண்டகமுமே.
மூவாத பேரின்ப வீடெனவு வந்துவளர்
முதல்விசெந் திருமங்கையே. (7)

---

## கலைமகள்.

ஆடகவி னோத முறு பாடகநூபுரமு
மாடமறை தேடவிரைசேர்
வாளுமித மாளுமலி கோலமல ரேயுவமை
யார்தனது சீறடிமுடி
சூடகமி லாவடிய ராடனனி பாடவவர்
தூயதிரு நாவினிடமே
தோணுமருள் காணவளர் வாணியெனை யாணிலைவி
தோகைதனை யேபணிகுவம்

மாடகவி யாழினிசை வாடிமிக நாணடையு
மாதுரிய கீதமொழியாள்

மாமணிம தாணிமிளிர் மார்பையிட மாகவரு
வாரணி படாமுலையினள்

வீடகனி னேயிடைவி டாதுசுக வாரிபன
வேத பரனோடு நிறைவாய்

மேதகுவண் மாநிலையில் வாழுமுமை யாளினிது
மேயினிது காரியெனவே. (8)

---

## காளி

விரிக்கு மிளந்தோட் டம்புயத்தின்
விளங்கி யுலகமுழுதும் விதி

வேதக் கொடியோன் முதற்றேவர்
வெருவித் தனது பணியியற்ற

வரிக்க ணரிய த்தருக்கி னம்போல்
வயவ னிலனென் றெதிர்த்துவரும்

மகிடன் றனையே வீறடங்க
வதைத்த சூலத் தினள்காக்க

அரிக்கு நிகர்நித் திலமாட
வணிக ணிறைந்த திருநல்லூர்

அமர்ந்து மன்பின் முதிர்ந்தவடி
யவர்க ளேற்ற வரமளித்தே

பரிக்கு முயர்தற் பரியாகிப்
பரவு கிருபா கரியான

பவதி வாழ வந்தவள் பார்ப்
பதியா ளுமையா ளுமையினையே. (9)

---

## சத்தமாதர்கள்.

பீடுற் றனமிவர் வேடத் தினண்மிகு
பேருற் றாரேழுள்

பீலிப் பரியிலு லாவிப் பரிவொடு
பேசச் சேர்சீராள்

தேடக் கனுழனின் மீதுற் றவளிகல்
ஓயத் தேரூர்வாள்

தீரக் கரியினள் பாசத் தினளிவர்
சேவைக் கார்வாமே

வாடிக் கடவுள ரோடிப் பலமுறை
வாய்விட் டாள்வாயே

மர்வற் புதவென வேபக் கணமவர்
வாழ்கப் பூவாழ்க

நாடிக் கடுவிட நாசப் படவுனு
நாதர்க் கோர்மாதாம்

நாகக் கனிநலே யாணற் றுணையென
நாமற் பாரூமே. (10)

---

## முப்பத்து முக்கோடி தேவர்.

கற்குலங் கரியுங் கிளிப்புரவி யும்பாவு
கவிவளைப் பெண்கள்படையும்

கன்னல்வில் லும்புதிய மலர்வாளி யும்படு
கபற்கொடியு மேபடைத்துச்

சங்கரனு தற்கணெரி யங்கமுடை யானலேகொ
டரணிமுழு வதும்விசயமே

சற்றுமற் றொருவர்க்கு முரிமையல் லாதவன்
றனோநடந்தியியனுங்

துங்கமுற வருளெழுகு கட்கடைப் பார்வையரு
டோமின்மா யாசத்தியிற்

சொல்லரிய வல்லபமி கக்குலவு செல்வியெந்
தொல்வினைய கற்றவந்த

மங்கைநலே மாநகரி லங்கிடக் குணபால்
வனைந்ததளி வாழ்வுகந்த

வாழவந்த வடேவி துணையாவர் முப்பத்து
முக்கோடி மாதேவரே. (11)

---

## செங்கீரைப் பருவம்.

அம்பொன்மலை யரையன்மரு வும்பதும மலர்வதனி
யாயிழைபொன் மேனைமயிலாள்
ஆர்வமொடெ டுத்தணைத் தாரம்பசிற்சுகம
தானமணை மஞ்சளாலே
சம்பிரம மாகவுட லெங்குந்தி மிர்ந்தொளிசெய்
தனகணைக் காற்கிடத்தித்
தண்ணருட் புனிதமஞ் சனமாட்டி நவிலொணுத்
தத்வமிட் களசொரூபப்
பைம்பதப் பட்டினு லீரம்பு லர்த்திமுற்
பவரகித நீறுசாத்திப்
பவிகசவு பாக்யமண் டிலகமிட் டேகதற்
பாதீப நீராஞ்சனஞ்
செம்மைபுற வேசுற்றி முத்தாடி ளங்குழவி
செங்கீரை யாடியருளே
சீர்மாவ ளந்திகழ்ந லூர்வாழ வந்தவுமை
செங்கீரை யாடியருளே. (1)

கந்தரமி ரிந்தலற வந்தகொந் தளகங்
கதித்தபின் னற்சடைசெய்தே
கமழுமலர் மாலைபுனை யொருகுழி யக்கொண்டை
கவினுறவு மேமுடித்துச்
சுந்தரமி [illegible]றை நுதறனிற் செய்யபொற்
[illegible]ட்டியுஞ் சாத்திநானங்
துலங்குவிரு விழிகட்கு மையெழுதி புபலளித
சுவணமணி யணிகளாலே
கந்தரநி [illegible]ந்திடவு மைந்தருவும் வெள்குங்
கரங்களிற் கங்கணமொடுங்
கதிர்செபரை வடமுபய பதகமல மிசைமணிகள்
கலிபரிபு ரம்பூட்டியே
செந்துவரை யனையவா யமுதூட்ட வளர்கிள்ளை
செங்கீரை யாடியருளே
சீமாவ ளந்திகழ்ந லூர்வாழ வந்தவுமை
செங்கீரை யாடியருளே. (2)

பகாரிய மாதவமு ஞற்றியுனை யீன்றவதி
பாக்யரா னந்தபோக

பரவசப யோததியின் மூழ்கியென் னம்மைவா
பவளவா யழகிவாவா

சுகமுறவு மெனதிருகண் மணிபோடி வாவெனத்
தாயகர மலர்கணீட்டித்

தோன்றவொரு முறையழைத் திடுமுன்ற வழ்ந்துந்
தொடர்ந்தவிள நடைபயின்றுந்

துகதகென வொளிருமணி கலகலென வவர்சருட
றழுவியெழின் மழலைமொழியின்

தனியமிழ்த வாரியிரு செவிவாய்ம டுப்பமென்
ஞனைமடி யணைமீதிலே

செகசிவ பரஞான விளையாடல் புரியாசி
செங்கீரை யாடியருளே

சீர்மாவ ளந்திகழ்ந லூர்வாழ வந்தவுமை
செங்கீரை யாடியருளே. (3)

பேரார மணிமுடியி னடுவட்கி டந்திலகு
பூதலத் தவர்வாழ்வுறப்

புந்தியினி னைந்தனுதி னந்தொழுதி ஞறுமெய்ப்
பொன்னடித் தொண்டரன்பின்

தாரமு தயர்வுபெறு முபயசீ றடிகளிற்
றவழுமொரு கான்மடக்கித்

தண்டைகிண் கிணியணிகி ழங்கமற் றொருகா
றமைத்திடவு நீட்டியேபின்

பாததா மரைபொருவு கைவிரித் தூன்றிபம்
பவளவா ணகையரும்பப்

பளபளென் னநெற்றியிற் சுட்டியும சைந்திடப்
படிவமுக மேனிமிர்த்துத்

நீரார கவனுடைய தங்கையெனு மலைமங்கை
செங்கீரையாடியருளே

சீர்மாவ ளந்திகழ்ந லூர்வாழ வந்தவுமை
செங்கீரை யாடியருளே. (4)

நீராடி ளஞ்சடா மவுலியர்க் குயர்வாழ்வு
நியமிக்க வந்தமயிலே

நித்யகல் யாணியபி ராமிரஞ் சிதவசனி
நியமவழி யடியார்களின்

போராடு மும்மலமிரு வினையற்று மனமற்ற
போதமெய்த் தொட்டிலிடமே

பூரணச தானந்த போகநித் திரைசெயும்
பொற்றொடி-இ யுலகமறிய

வாராடு மணிமதா சலகுபப மாமுலை
மடந்தைமே ஞதேவியுன்

வயிரூர வமுதூட்ட வுண்டவச முறவெழின்
மணித்தொட்டி லிற்கிடத்திச்

சீராடி யோராட்டி டக்கண்வள ரும்பிள்ளை
செங்கீரை யாடியருளே

சீர்மரவ ளந்திகழ்ந லூர்வாழ வந்தவுமை
செங்கீரை யாடியருளே; (5)

வேறு.

முடியில லங்கல சைந்துக மழ்ந்திட
மொய்த்தப ணியாட

முழுமதி யானன மணிநகை நிலவொடு
முறிபுரு வமுமாட

வடிசெய்வ ளமிழ்தெழு கருணையும் விரவிய
வரிவிழி யொளியாட

வாணுத றனிலெவர் சுட்டிகு யிற்றிய
வயிரவொ ளிழலாட

கடியணி கலனிரு மகரமு மாடக்
கனசி றடியிணையிற்

கண்டவர் கொண்டபெ ரும்பே றென்னக்
கலிநூ புரமாட

அடியவர் நலைநகர் மருவம கிழ்ந்தினி
தாடுக செங்கீரை

அஞ்சுக ரஞ்சித மிஞ்சுமி ளஞ்சொலி
யாடுக செங்கீரை. (6)

கொங்கவிழ் கின்றபு யங்கள்கு விந்து
குலுங்கிய சைந்தாடக்
கோலவு லாசம தாணிய தோடு
குலாவுப லணியாடப்
பொங்கிடு மேகலை தங்கிடை தூசு
புனைந்து துவண்டாடப்
புங்கவ ரெஞ்சிவ சங்கரர் கொண்டியர்
பொற்கர வளையாட
வெங்கண ராவெனு மிங்கித மார்திரு
விரலாழி யுமாட
வேதவி னோதபு ராதனி நல்லை
விரும்பியு னருளாட
அங்கசி றைந்தொளிர் சாமளம் வீசிட
வாடுக செங்கீரை
அஞ்சுக ரஞ்சித மிஞ்சுமி ளஞ்சொலி
யாடுக செங்கீரை. (7)

திருமரு வியபிறை நுதறனி லழகொடு
திசழ்குறு வெயர்வாடத்
தெய்வம ணங்கமழ் சேவடி மலரெழு
சீருள மிழ்தாடத்
திருவரு ளமிழ்தை யுணவரு மடியவர்
சேர்துதி யிசைபாடிச்
செயலுள துனைவழி படுசெய லினியுரை
செயெனம கிழ்ந்தாடப்
பருவநன் மடவிய ரான்மிக வேவரு
பவமும மிழ்ந்தோடப்
பாலகன் மேந்றயை பாலியெ னுங்கில்
பாவல ருஞ்சூடி
அருள்வடி வாகிந லூரம ரம்பிகை
யாடுக செங்கீரை
அஞ்சுக ரஞ்சித மிஞ்சுமி ளஞ்சொலி
யாடுக செங்கீரை; (8)

பரிமள களபமு மெழுகிய குழன்முடி
பண்பேய் பெண்பாலாய்

பாமத மொருவிய புரமெரி யரர்பதி
பங்கே மங்காயொண்

குருமணி மரகத நிழல்விரி யழகெழு
கொபபே கொம்போடார்

குளிர்மதி யெனவள ரரசிள மகள்புவி
கொண்டாடுங் கோதாய்

அருமறை முடியினி னடமிடு வடிவி
னணங்கே நங்காய்பொன்

அடியினை விரதியர் மனமிக வுருக
வவிழ்ந்தா றுந்தேனே

திருமக ளொடுகலை மகள்பணி தலைமகள்
செங்கோசெங்கீரை

தினமுமெ யடியவர் தொழநலை வருபவள்
செங்கோசெங்கீரை. (9)

அலைகட லுலகையொர் கருணையி னெடுவிதி
யன்பே யென்போடார்

அரவணி பரனிரு விழிமலர் மறைய
வணைந்தா டுந்தாயே

கலையனு பவர்மன வயல்வளர் கனுவில்
கரும்பே வெம்பாசக்

கலியன்வ லுயிரவி பயிரவி தணையடி
கண்டே கொண்டாட

உலையிடு மெழுகென வகமிக வுருகி
யுடைந்தே நொந்தோர்முன்

ஒலிமணி கலகல வெனவிடை கடவி
யுகந்தே வந்தாளுந்

திலகல நெலைநகர் நடமிடு பவருயிர்
செங்கோ செங்கீரை

தினமுமெ யடியவர் தொழநலை வருபவள்
செங்கோ செங்கீரை. (10)

## தாலப் பருவம்.

தமரப் புள்ளை யரியிலரி
தழையா லோச்சி யெடுக்கவிருற்
றதும்பி வழியும் புதுத்தேனுந்
தானே பழுத்த நீங்கனியிற்
றிமிரப புதுப்பூஞ் செந்தேனுந்
திகழ்ந்தொன் றாகக் கலந்தோடித்
திரைக ளெறிபு நீர்ப்பெருக்கிற்
சேர்ந்து மடைகண் மடுத்தோடுங்
கமலத் தடத்தில் வெண்சங்கங்
கரையி னீன்ற மணியையெலாங்
கண்டு பொலன்சூட் டனப்பெடைகள்
கருவென் றெண்ணி யடைகிடக்கும்
அமரர் பதியிற் பெருகுநல்லூர்க்
காசே தாலோ தாலேலோ
ஆளுஞ் சிவனார் வாழவந்த
வம்மே தாலோ தாலேலோ. (1)

சுரும்பி னிசைபர் டிடமஞ்ஞை
தோகை விரித்து நடமாடத்
துணர்த்தா ரலர்ந்து மகரந்தந்
தூவ நறுந்தண் டேறலினால்
விரும்பும் பனிநீர் துளித்துவரு
வேரிச் சிறுகான் மெல்லெனவே
வீசக் கமுகு குடைநிழற்ற
வெய்யோ னிரத வயப்பரிகள்
கரும்பின் பசிய தழைமேய்ந்து
களைதீர்ந் தென்று மகிழ்ந்துசெலுங்
கவினார் தருக்க ளும்பரிற் போய்க்
கவியும் பொழிலி லலர்பருவத்
தரும்ப ரலர்ந்து கமழு நல்லூர்க்
காசே தாலோ தாலேலோ
ஆளுஞ் சிவனார் வாழவந்த
வம்மே தாலோ தாலேலே. (2)

கைஞ்ஞின் ரூர்க்கு நிறைவளையே
கவினார் பவள மலைக்கொடியே
கடையே னென்மேற் கிருபையின்றேற்
கருதி னேற்கிங் கியாவர் துணை
பைஞ்ஞின் ரூர்க்கு நிதம்பாலார்
பண்டிக் கரூஉ ரிடைக்கிடந்து
பாரின் மிகவே பிறந்தலுத்தேன்
பார்த்தே யிருந்தாய ருளிதுவோ
மைஞ்ஞின் ரூர்க்கும வாட்கணியே
மைந்த ரியற்றும் பிழையனைத்தும்
மாதா பொறுத்தன் முறையன்றோ
வந்தித் தருண மௌனமகிழ்வித்
தைஞ்ஞின் ரூர்க்கு மாடநல்லூர்க்
காசே தாலோ தாலேலோ
ஆரூஞ் சிவனார் வாழவந்த
வம்மே தாலோ தாலேலோ. (3)

பேட்டுக் கிளியே யிளங்குயிலே
பெற்றார் பெற்ற பெரும்பேறே
பிடிந லெகினம் பின்றொடராப்
பெயரு மடிமென் சிலம்பரற்றப்
பூட்டுஞ் சதங்கை கிண்கிணெனப்
பொலியும் பருவ நடைமடவாய்
புவனந் தழைக்க மகளி ரொடு
பொருந்த மணிச்சிற் றிலையமைத்தே
கூட்டுஞ் சிறுசோ றூக்கியனை
குழுவிக் கமுத மருத்துதல்போற்
குழைந்தன் பாலம் மாமகளிர்
குழுவி னுப்ப ணிருந்தனை
தாட்டி யெனவே வூட்டு நல்லூர்க்
காசே தாலோ தாலேலோ
ஆரூஞ் சிவனார் வாழவந்த
வம்மே தாலோ தாலேலோ. (4)

சீதக் களபச் செழுஞ் சேறு
திமிர்ந்தன் ணைந்து திரண்டுருண்டு
திதலை படர்ந்த வனமுலையார்
சேருங் கொழுந ரொடுபுலந்து
போத வமளி தனைநீத்துப்
புறம்போந் தினிய நிலவுமிழும்
பொற்றூண் மறைவிற் காந்துநிற்கட்
புக்க விடந்தே டுத்தலைவர்
மாத ருருவின் சாயறனை
மகிழ்ந்து தழுவக் கடைக்கணித்து
மணிவா ணகைசெய் தார்வமிக
மருவிச் சருவி விளையாடும்
ஆத வனுஞ்சேர் மாடநல்லூர்க்
கரசே தாலோ தாலேலோ
ஆளுஞ் சிவனார் வாழவந்த
வம்மே தாலோ தாலேலோ. (5)

வேறு.

தேனைப் பழிமொழி மானைப் பொருவிழி
திருவிற் குயருருவே
சீரற் புதவடி யார்கட் கருள்புரி
திறலிற் பெறுதவமே
மேனைக் கொடியிமை வான்மெய்த் தவமகண்
மேலைப் பதியரசே
வேரிச் சினைமலர் வாரிப் பரிமளம்
விளையப் புனையழகி
ஊனச் சடவடி வேனைப் பணிகொள
வுருகிப் பிரிதலிலா
தாளைத் தினநினை திடன்வைத் திடுநினை
யுசிதச் செயவுமையே
தானைத் துடியிடை மீனக் கொடியினை
டாலோ தாலேலோ
தமிழ்நலை யம்பதி வளருமி ளங்கிளி
தாலோ தாலேலோ. (6)

தூயர்க் கரவணி நேயர்க் குவகைசெய்
சுகிர்தக் குணமணியே
சுரர்மெய்த் தவர்பணி பரைமுக் கணிமுத்
தொழிலுய்த் திடுசிவையே
மாயற் கிளையவ ளேமெய்த் திடுமிசை
மழலைப் பனிமொழியாய்
மனமற் றுயர்நிலை பெறநற் றவமுயன்
மதியுற் றவர்நிதியே
தீயர்க் கரியசொ ரூபத் தினையெழி
றெறியுந் திரிபுரையே
சிலைமைப் புருவவொ ணுதல்வித் தகியனு
தினமெற் கருள்புரியுந்
தாயர்க் கதிகம தாமற் புடையவ
டாலோ தாலேலோ
தமிழ் நலை யம்பதி வளருமி ளங்கிளி
தாலோ தாலேலோ (7)

வேழப் பணைமுக ஞர்மற் றிகழுயில்
வேலுக் கிறையவனுர்
வேதப் பழமொழி வாய்வைத் தமுதனும்
விரைபற் றிணைமுலையாய்
பாழிப் பிரபல மூரிக் கதமுக
பதியைக் கதிகெடவே
பயமற் றிடுமவ ளுடுமெற் புரிமிகு
பலவைப் பரியணையே
ஏழைக் குனருளெ ளுளைக் குதவுவ
திறைவற் குறுதுணையே
ஏதிப் படிமன மேசற் றுருகிலை
யீதற் புதமலவோ
தாழப் புரிகுழ லாளற் கருமக
டாலோ தாலேலோ
தமிழ்நலை யம்பதி வளருமி ளங்கிளி
தாலோ தாலேலோ (8)

### வேறு.

சொஞ்சமி ழஞ்சொலி னஞ்சுக மேபைங்
கோதாய் தாலேலோ

குரவணி சரவண பவதகர் தனைய நள்
குமரீ தாலேலோ

பஞ்சென னைந்துநி னைந்தவர் நெஞ்சுறை
பாவாய் தாலேலோ

பங்கய னார்சிர மங்கையிலங்குக
பாலீ தாலேலோ

செஞ்சடை யஞ்சிவ னுய்ஞ்சந லஞ்செறி
தேவி தாலேலோ

சிறிபணை யாளனு கூலத யாபர
தேசே தாலேலோ

தஞ்சென வஞ்சிடு குஞ்சர முன்பினர்
தங்காய் தாலேலோ

சதுர்மறை பரவிய புகழ்நலை வருபவ
டாலோ தாலேலோ. (9)

கண்மணி யேகனி யேசுவை யான
கரும்பே தாலேலோ

கரியமி டற்றினர் முத்தமிடத்தகு
காதலி தாலேலோ

விண்மணி யென்னவி ளங்குயர்ஞான
விளக்கே தாலேலோ

வேள்படி வத்தையெரித்தநு தற்பெரு
விழியே தாலேலோ

உண்மணி யேநன் னிலைநிற் பவருயி
ருறவே தாலேலோ

உள்ளநெ கிழ்ந்துட னுள்ளுவ ருக்கரு
ளுமையே தாலேலோ

தண்மணி யேயொளிர் பெண்மணி யான
தயாபரி தாலேலோ

சதுர்மறை பரவிய புகழ்நலை வருபவ
டாலோ தாலேலோ (10)

## சப்பாணிப்பருவம்.

மாமருவு மாலைபுனை மந்திரசொ ரூபியே
வாமுதவு கருணாகரீ
மங்களாகல் யாணியே யிங்கிதநி ரந்தர
வளங்குலவு சுகவாரியே
நேமருவு மன்பர்வாய் வண்குமுத மலர்விரிய
நித்தமரு ணிலவுவீசி
நெகிழுமம் மாரிலெழு சொற்சுவைத் திதியமிர்தி
னேர்படியு மோர்மதியமே
தேமருவு பக்குவப் பாலடிசில் பொற்கலஞ்
செறிபக்கொ ணர்ந்தெடுத்துத்
தித்திப்ப தெனவூட்ட வுண்டளாந் துலகெலாஞ்
செயலாற்சி வந்திலங் கும்
தாமரைநி கர்த்தநின் கைத்தலமி ரண்டினாற்
சப்பாணி கொட்டியருளே
சந்ததந லூர்வாழ வந்தவளை னுங்கவுரி
சப்பாணி கொட்டியருளே (1)

வாளொளிசெய் வரிமருவு நயனகவு மாரியே
வாடாத தெய்வமலரே
வாதமிடு சமயங்க டந்தமோ னார்த்தமே
வரையாம லுதவுதருவே
நீளவனி துதிசெயச் சீகாழி யம்பதியி
னியதிநெறி பிறழாதநன்
னிலைபெற்று யர்ந்தகவு ணியகுலவி ளக்காகி
நிகரில்பர சமயமோன
கோளரியெ னத்தோன்று ஞானசம் பந்தனுங்
குழவியன் றுணைநினைந்தே
கோலவாய் விட்டழவு மோடிவந் தாவலொடு
குளிர்வள்ள வமுதமூட்டித்
தாளவட் டங்கொட்டி நிலைகாட்டு நின்கையாற்
சப்பாணி கொட்டியருளே
சந்ததந லூர்வாழ வந்தவளை னுங்கவுரி
சப்பாணி கொட்டியருளே (2)

மாதவத் திடைவிடா துன்றி நவ ருட்பெருமை
வாழ்த்தியி ரு வினையின்வண்ணம்

மாருத பிறவிபெழு கடலைக்க டத்தியம்
மாமுத்தி யங்கரையிலே

கோதறச் சேர்க்குநின் றி நவடிப் புணைகண்டு
கொண்டேர வெற்குதவுவாய்

கோங்கரும் பன்னபூந் தனபார வல்லியே
கோமளக லாபமயிலே

பாதரச மாயுளஞ் சஞ்சலத் துட்படாப்
பரமசுக நிட்டையோர்க்கே

பாலித்த சீரபய வாதமுந் தோன்றமுப்
பானிரண் டறமவளர்த்த

தாதவிழ்ம லர்க்கரமு கிழ்த்தியும லர்த்தியுஞ்
சப்பாணி கொட்டியருளே

சந்ததந லூர்வாழ வந்தவளெ னுங்கவுரி
சப்பாணி கொட்டியருளே. (3)

காரிருட் படலங்கி ழித்தெழுசு டர்ப்பரிதி
கதிகொடுவ ளைத்தபுவியிற்

கருதரிய பல்விதச் சீவகோ டியின்மிகக்
கடையனிவ னென்றெண்ணியோ

பாரநம தல்லவென் றேவலது தொண்டர்வசை
பகருவரெனக் கணித்தோ

பவளவாய் முத்துதிர்ந் திடுமென்ன வஞ்சியோ
பங்கயப் பாதமான

பேருருட் பிரசாத நல்கியெனை யாளாத
பெருமையென் பெருமையம்மா

பிஞ்ஞகனி டத்துவளர் மஞ்ஞைநீ தாயுனது
பிள்ளைநா னன்றேசொலாய்

தாரிடங் கொண்டிலகு வரதவங் கையினுற்
சப்பாணி கொட்டியருளே

சந்ததந லூர்வாழ வந்தவளெ னுங்கவுரி
சப்பாணி கொட்டியருளே. (4)

பாலொடுப ழங்கள்கற் கண்டமுது கூட்டியன்
பாகப்பி சைந்தூட்டியே
பஞ்சவன் னக்கிளிகள் கொஞ்சிரஞ் சிதமென்மொழி
பழகவின் மொழிபயிற்றி
மாவினிற் குழறுமம் மொழிகேட்டு வந்தருகில்
வைத்துமுற் றத்திருந்தும்
மண்டூசி யூடாட வம்மனைபி டித்திளைய
மகளிர்விளை யாடல்கண்டுஞ்
செவிணைசொ லுங்கண்மட மங்கையர்கள் வந்துதன்
செம்பவள வாய்திறந்து
தேனேசெ ழுங்கரும் பேவுன்னை யீன்றநற்
றேவியிங் காரென்றிடச்
சாலவுமி தோவெனச் சுட்டியே காட்டுனைச்
சப்பாணி கொட்டியருளே
சந்ததந லார்வாழ வந்தவிளை னுங்கவுா
சப்பாணி கொட்டியருளே (5)

வேறு.

வானப் பிறையையெ திர்த்தழி வுற்றிட
வைத்துவ ளைந்தநுதல்
வண்ணவி றன்னிலொர் கண்ணிணை யாநுதி
வண்டுகள் கொண்டடிபார்
ஊனப் பிரையையு ணப்பிரி யத்தரை
யுய்த்துயர் வெற்றிகொளும்
உவகைம னத்தின ளிதவச னத்தின
ளுமையா ளுமையாளும்
ஏனற் புனவளி மானைப் புணர்குரா
வேமொய்த் திடுபுயனை
ஏலக் குழலியர் மாலுற் றிடவிளை
யிறைவர்க் கெதிருதவுங்
கூனற் றொடிதழை மாநற் கையினள்
கொட்டுக சப்பாணி
கொண்டற வழ்ந்திடு தண்டலை நலையினள்
கொட்டுக சப்பாணி (6)

தென்றனு லாவிய பொன்றிகழ் கோடியர்
தெய்வ நிலைபெற்ற

தென்கயி லாயவி லங்கிரி யிற்றவர்
தேவரொ டுஞ்சூழ

வென்றிவெண் மால்விடை யின்றவிசேறி
விரும்பச மேதமதாய்

வித்தக மோகப ராபர ருருறும்
வேளாவி ராவணனுங்

குன்றென நின்றத டப்புயன் வந்து
குனிந்தமி டந்திடவே

குன்றந டுங்கவொ டுங்கிந லிந்து
குலைந்து விரைந்துவெறிஇக்

கொன்றைமெ மரைத் தருவுங் கையினள்
கொட்டுக சப்பாணி

கொண்டா வழ்ந்திடு தண்டலை நலையினள்
கொட்டுக சப்பாணி (7)

பாடற் குமரி பாகத் தையுமன்
பாதப் பணிவிடையும்

பாரிற் பிணியற வாழ்நற் சுகமொடு
பாலித் திடநினைவாய்

நாடற் கரியவ ளேமெய்ப் பரவெளி
நாமப் பொருவொளியே

நாகக் குழலழ கியுத் தமருமூ
ஞானக் கனிரசமே

தோடற் பொலிகுழை யாடப் பணவிடை
துவளத் துவளமணிச்

சாதிக் கலைகடு ளுமபத் திலையிற்
றோணக் கடவுளரின்

கூத்த் திருநட மாடிப் பயில்பவள்
கொட்டுக சப்பாணி

கொண்டற வழ்ந்திடு தண்டலை நலையினள்
கொட்டுக சப்பாணி (8)

வேறு.

பொதிவரி யரவம தர்த்துவி ரித்தப டப்பாயற்
புனிதந லழகர்பொ ருப்புர முற்றும யிற்சாயற்
பெறுமெழி லிளையந யப்பெ ணும் வித்தக முற்றாளும்
பிரசம லருறைபி ணைக்க ணு மற்பொடு வப்பாயே
இறைவியு னடியினி ணைக்கம லப்பணி பெற்றார
இழையணை மதிமுக மிக்குறி கர்த்தமொ ழிப்பாவாய்
நறையவி ழளகந டைப்பிடி கொட்டுக சப்பாணி
நலைநக ரரசுந டத்தினள் கொட்டுக சப்பாணி (9)

பழமறை யினியப ழத்தில்வ டித்தபு துத்தேனே
பளபள வெனவுமி ழைத்துவி டுத்தத னிச்சோதி
ஒழுகிய கருணையு தித்தமு கப்பெரு மைத்தாயே
உளமல மொழியநி னைத்தநி னைப்பின ருக்காக
விழைவொடு மருவிவி னைப்பய னைப்தவிர் வித்தேமா
விகசித மலர்களெ டுத்தடி யைத்தொழ வைத்தாளும்
நழுவிய புழுகின கிற்கொடி கொட்டுக சப்பாணி
நலைநக ரரசுந டத்தினள் கொட்டுக சப்புாணி (10)

## முத்தப்பருவம்

பாகத் துருசர்க் கரைநறுந்தேன்
பாலிற் கலந்து வடித்தெடுத்துப்
பருகத் தெவிட்டாத் தெள்ளமிழ்தே
பாகே கனிந்த முக்கனியே
ஊகத் தவர்தம் முள்ளுணர்வே
வுலவாக் கிளியே மடக்கொடியே
ஒன்றாய்ப் பலவாய் நின்றவளே
வுமையே யுடலே யுடற்குயிரே
நாகத் தரையன் புதல்வியெனு
நாரா யணியே நாயகியே
நான்செய் தவமே சின்மயமே
நலமே நம்பன் றணக்குகிதம்
மோகந் தருநின் செங்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முத்தி விளைக்கு நல்லைநகர்
முத்தே முத்தந் தருகவே (1)

வானந் தழைத்த மாமணியே
மலையிற் பிறந்த மாமயிலே
வளருங் கடவுட் பரிதிகண்டு
மலருங் கமல நறுமலரே
தானந் தழைத்த போதகத்தைத்
தவத்தி னீன்ற விளம்பிடியே
தன்பார்ப் பெனக்கா கம்புரவாத்
தழைமென் சிறைக்கோ கிலப்பெடையே
கானந் தழைத்த செழுந்தமிழின்
சவியே கவிதைக் கருப்பொருளே
காவி யனைய விழிமானே
கற்பு மலர்பூத் தொளிர்கொடியே
மோனந் தழைக்க நின்கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முத்தி விளைக்கு நல்லைநகர்
முத்தே முத்தந் தருகவே (2)

பூவா யளியின் மேல்லோதிப்
பொதிச்சி முறங் குலவுமின்னே

புல்ல ரறிவிற் புலப்படாப்
போத பரிபூ ரணசுகமே

காவா யெனநின் றேற்குனது
கருணை விழிகாட் டாததென்னை

கலைமாச் செல்வ ரங்கைநெல்லிக்
கனியே கவடார் தருக்களிடை

மேவாப் பிரச மென்குடமே
விளங்கங் கயற்கண் மாநிதியே

விம்முந் தடந்தோட் கிசைந்துவளர்
வேய்முத் தேமுத் தாடவரும்

மூவா முதலே நின்கனிவாய்
முத்தந் தருக முத்தமே

முத்தி விளைக்கு நல்லைநகர்
முத்தே முத்தந் தருகவே (3

பைத்த பணத்தின் பஃறலைச்சுடிகைப்
பாந்தள் சுமந்த பாருலகிற்

பாவ மாயை வலையினினுட்
பட்டே மயங்கி யவ்வலையை

வைத்த மாமா நதவேடன்
வசத்தா ளாகி யலைந்தோரும்

மலர்ந்த கடைக்க ணோக்கதனில்
வளருங் கருணை மகத்துவத்தா

பொய்த்த வாழ்கை யிஃதென்கொல்
புரிந்தே மலைந்தேந் தெரிந்தோற்

போது மனுப வித்தசுகம்
போதுங் காவா யெனநாடும்

மொய்த்த குழலாய் நின்கனிவாய்
முத்தந் தருக முத்தமே

முத்தி விளைக்கு நல்லைநகர்
முத்தே முத்தந் தருகவே (4



தமிழ்நா...

சொல்லிற் பயிற்றுஞ் சுருதியின்ற்
சூட்டுஞ் செய்ய திருவடியே

துதிக்கு மடியார்க் கிரண்டற்ற
துரியா தீத நிலைகாட்டும்

பல்லற் புகழ்ற் குருவான
பரமேஸ் வரியே பார்ப்பதியே

பார்க்க வக்க ணன்றி முகக்
கண்ணாற் பார்க்க வியலாது

வில்லைப் பொருவுந் திருநுதலாய்
வியந்து காண்பான் காட்சியே

விரும்ப லெகில் விலைக்கடங்கா
வெண்முத் திருந்து மென்பயனே

முல்லை நகையங் கனிவாயான்
முத்தந் தருக முத்தமே

முத்தி விள்க்கு நல்லைநகர்
மூத்தே முத்தந்தருகவே (5)

வேறு.

வல்லைத்த கொங்கையார் தங்கணவ ரொடுகூடி
மருமலர்ச் செண்டெறிந்தே

வருகமலவாவிமஞ் சனமாடி யஞ்சன
மயக்குறுகு ழற்செருங்கலர்ல்

மல்வைத்த திண்டோள ணுங்கவீ சக்கொழுநர்
மாறிமா றிச்செறிந்து

வள்ளத்து மழைமதிநி கர்த்தவெண் டயிர்முத்து
வைத்தருந் திக்களித்துப்

பல்வித்தைபிணுமினிய தீங்கவினி சைக்கவி
படித்திளந் தென்றல்வீசப்

பஞ்சடிசிவக்கவெங் கணுமுலவி வேனில்மெதரு
பருவமைப் பொழில்கள் சூழ்ந்தே

செல்வத்திாளிவளரு நல்லையம் பதியம்மை
செம்பவள முத்தமருளே

இந்திரதிலகவதி சுந்தரத் திருநுதலி
செம்பவளமுத் தமருளே (6)

வண்டோலி டுங்கரும் பானற்க டுத்தகண்
முலைக்குவடெ னத்திரண்ட

வனமுலையு முச்சியரொ டுங்கள்வார்ந் தொழுகும்வாய்
மள்ளர்செந் நெற்கழனியிற்

கொண்டாடி யின்னியக் குரவையிட் டணிநிலவு
கூன்பிறையி னரிவாளினைக்

கொண்டுகதிர் கொய்துகுவி யரிகளைக் கட்டிக்கொ
ணர்ந்தேக வத்தடித்து

ஞெண்டாடி யோடிடுவ ரம்பெலா நென்மணி
நிறைந்திடவு நெறிகளெங் கும்

நேருறப் பண்டிகளி லேற்றிமனை யிற்சேர்க்கு
நீர்வளந லூரில் வாழுந்

செண்டாடி வந்தனமின் வாழவந் தம்மைநீ
செம்பவள முத்தமருளே

சிந்துரத் திலகவதி சுந்தரத் திருநுதலி
செம்பவள முத்தமருளே (7)

பின்னற்ச டைக்கணிதொ டுத்தளியெ ழுத்தேக்கு
பிரசமல ரார்கூந்தலாய்

பித்தனிட மருவியபு ரத்தனைய ருத்தமறை
பேசிய குணக்குன்றமே

மின்னற்க டுத்தவிடை யன்னப்பெ டைக்குநடை
மெல்லப்ப யிற்றுகுயிலே

வெல்லச்சு வைத்தொகையை வெல்லப்ப ணித்தமொழி
வில்லற்கி னித்தகனியே

மன்னர்க்கி ளஞ்சிங்க மென்னத்த கும்பஞ்ச
வன்கொற்ற மவுலிசூடி

மனமகிழ்வி னொடுகொத்தி னிசைவழா தொழுகிநெறி
மருவுசெங் கோல்பிடித்த

தென்னற்க ருங்கவலை தன்னைத்த விர்த்த வுமை
செம்பவள முத்தமருளே

சிந்துரத் திலகவதி சுந்தரத் திருநுதலி
செம்பவள முத்தமருளே (8)

## வேறு.

திடுதிடு வெனவதிர் கருமுகி லிறமுறு
திக்கய மொத்தனவாய்த்

தெரிவரு முருவமை கவரிக ளினமொரு
மித்தக ளைச்செருவிற்

படுபுன லலைவழி கயல்குதி கொளமுறி
பட்டுவு ழக்கியுணைப்

பசியக னலிரச மொழுகிட வுதிர்மணி
பற்பல நட்கதிருங்

கெடவொளிர் குடவளை நிரையொலி பெருகிய
கெட்டிவ ரப்பருகார்

கிளர்வள நிலைநக ரரசியல் செயவரு
மிப்புவ னக்கிளியே

முடிபுனை மடவர லழகிய குயின்மொழி
முத்தம ளித்தருளே

முதுவழி வழியடி யவருள நிறைபவள்
முத்தம ளித்தருளே (9)

மழவிடை யானிட மருவுபெ ணரசிம
டப்பிடி பொற்பதும

மலரடி தொழமிகு தவமில னெனினும
டுத்தக டற்புவியிற்

பழமறை விரிமுறை யினினுள படியவ
டிப்பணி யுற்றவர்தம்

பருன[illegible] மொழிநித மனுபவ முறவழி
பட்டனர் வற்றிடவே

சுழலக மடமைகொ ளடிமையின் மிசையளி
வைத்துன ருட்டுணையிற்

சுகநிலை தனின்மிக மகிழ்வுற மனதி
னினைத்தரு டுத்தியமே

முழுமதி முகமதி மரபினின் முதல்வினின்
முத்தம ளித்தருளே

முதுவழி வழியடி யவருள நிறைபவள்
முத்தம ளித்தருளே (10)

## வருகைப் பருவம்.

பேருலவு துங்கப்பெ ருஞ்செஞ்ச டாடவிப்
பெருமானி டக்கையொருமான்
பெற்றமா னரியமறை முறையிட்டு மறிவரிய
பேரின்ப வனுபோகனுஞ்
சீருலவு தெய்வப்ப சும்பொற்ப யிர்க்கூட்டு
தெளியன்பி னீர்ப்பெருக்காற்
றிகழன்ப ரிருதயச் செய்யமல ரோடையிற்
செவ்வேம லர்ந்தகொளும்
ஏருலவு கஞ்சப்பொ லன்சிற டித்தலத்
தெகினக்கு ரற்சிலம்பு
எங்கக்க லன்கள்கல கலவெனவ திர்ந்திடவு
மிருநிலம டந்தைதாங்கத்
தாருலவு மௌவலங் குழலம்மை மெல்லெனத்
தருணமிது வேவருகவே
நல்லிமலர் மெல்லிதிரு நல்லைநகர் வல்லிநிறை
சர்வசா ரணிவருகவே (1)

வெண்டரள மணிநகைது லங்கிளங் குமரியே
மிக்கசவு பாக்யவதியே!
விரிந்தவண் டப்பரப் பிற்சீவ கோடிகளை
வேறுவே றறவகுத்துக்
கண்டிடவ யாவுமீ ன்றுகாத் தருளம்மை
கனகமா டக்கூடலிற்
கடிமணத் தம்பிமே லன்கணவ ருவகையொடு
கையினுற் றாக்கிவைத்துத்
தொண்டியற் றப்பெற்ற தாயநீத் தவரகந்
தோன்றிட நடங்கொண்டதாய்த்
தொல்லுலகி லடியவர்க சிந்துருகும் விழியருவி
தோய்ந்தென்முடி கொண்டதாள
தண்டரள மணிநூபு ரச்சிலம் போலிடுந்
தாள்பெயர்த் தேவருகவே
நல்லிமலர் மெல்லிதிரு நல்லைநகர் வல்லிநிறை
சர்வசா ரணிவருகவே (2)

கடிபட்ட தேமலர்க் கூந்தலைக் காரென்று
கலபமயி லாடிவரவுங்

கவின்விளம் பாதநடை கற்பா னனக்குழாங்
கண்டுபின் னோடிவரவுந்

துடிபட்ட நுண்ணிடைத னினமென்ன மஞ்சிடைத்
தோன்றுமின் னாடிவரவுந்

தூயமா மதுரமொழி செவிமடுத் துன்கையஞ்
சுகமினிது பாடிவரவும்

வடிபட்ட நகையொளியை நிலவென நிலாமுகிகண்
மகிழ்வுடன் கூடிவரவும்

வாக்குமன மொன்றாய நின்றொண்டர் போற்றியருள்
வரமடைய நேடிவரவுஞ்

சடிலத்தர் பங்கிலுறை வாழவந் தம்மையெந்
தருணமங் கலைவருகவே

நல்லிமலர் மெல்லிதிரு நல்லைநகர் வல்லிநிறை
சர்வகா ரணிவருகவே (3)

வம்பிடங் கொண்டகுழல் மரகதக லாபமே
மழலைப் பசுங்கிள்ளையே

வாட்டானை வென்றவொரு கோட்டானை தனையீன்ற
மதர்விழிப் பேட்டனமே

செம்பிடங் கொண்டகதிர் வம்படருகொங்கையே
சுத்தசை தன்யமணியே

துவாதசா ந்தப்பெருவெ ளிக்குளொளி யானசிற்
சோதியே மாதேவியே

கொம்பிடங் கொண்டவிடை துவளமணி மேகலை
குலுங்கமதி முகமலர்ந்தே

கோதிலா மாதவத் தோர்களன வரதங்
குறித்தவுயர் வீடளிக்குஞ்

சம்பிடங் கொண்டுவளர் வாழவந் தம்மையெந்
தாய்பரா பரிவருகவே

நல்லிமலர் மெல்லிதிரு நல்லைநகர் வல்லிநிறை
சாவகா ரணிவருகவே (4)

நஞ்சுண்ட கண்டனென்ன வெங்க ணும்பி யாபியெண
நாதாந்த யோகனென்ன

நானிலத் துயிர்கட்கு முயிராயி னுனென்ன
நவில்சைவ சமயமேவி

மஞ்சுண்ட குழலியர்கண் மோகநீத் தார்களு
மறைமுதற் கலைகடாமும்

மனமகிழ்வு கொண்டுதுதி செயுமெமது கர்த்தனுன்
மனத்தூட லைத்தணிப்பான்

பஞ்சுண்ட மென்றாளைப் பாதபது மங்களிற்
பணாமுடிச் சடைபரப்பிப்

பலதரம் வணங்கவுள் ளுவகைகொடு மதிதேய்தல்
பார்த்துமுத் தெனநகைத்துச்

சஞ்சுண்ட பவளமே னியினழக ருக்காசை
தருபரா பரிவருகவே

தல்லிமலர் மெல்லிதிரு நல்லைநகர் வல்லிவிறை
சர்வகா ரணிவருகவே (5)

வேறு.

ஆழி குடித்த மாமுனிவ
னகத்துட் டிமிர மலமகல

அருண்மெய்ஞ் ஞான சற்குருவா
யாண்ட சிவசண் முகக்கடவுள்

ஏழின் னிசைப்பா வளிசுவைத்த
விதழ்த்தண் டேறற் கடப்பமலர்

ஏய்ந்த மாலை தூன்மார்ப
னெயினர் குலக்கோ மகட்புணரும்

கோழிக் கொடியோன் றனையீன்ற
கோதா யசுரர் குலமடியக்

குளித்த குமரன் கையிலயிலாக்
குடிகொண் டமரர் சிறைமீட்டு

வாழி வாழி யெனவாழ்த்த
வாழ்ந்த வாழ்வே வருகவே

ஏர்கை குடும் வாழவந்த
வள்ளீ வருக வருகவே (6)

ஞால மிசையைந் தொழிலியற்ற
நாமம் வேறு வேறடைந்து
நடித்த வீறி லாவொருத்தி
ஞான னந்த நயப்பிழம்பே
சோலைக் கிளியே யோரைந்துந்
தொலைத்த வுரத்தோர்க் குயிர்த்துணையே
தோளா மணியே பிரணவத்திற்
றோன்றி யொளிர்சுஞ் ஞானியே
மூலத் தலத்துக் குண்டலியாய்
யோகர் தமையாள் முக்கணியே
மூசு வரிவண் டார்த்தநறு
முகையி னிதழிமுடிக்கசைத்து
வாலத் துவித நீறணிந்த
வள்ளல் வாழ்வே வருகவே
வாகை சூடும் வாழவந்த
வல்லீ வருகவருகவே (7)

கள்ளிற் பொலிந்த பொகுட்டிதழ்ப்பூங்
கமல மலர்வா வியிலெறிந்து
கதிமென் றிரையான் மேலெழுந்த
கயல்க ளுகழ வம்மலரின்
உள்ளிற் பொலிந்த திருமகள்கண்
டுவகை பூத்து நங்கணவர்
உந்தி பயந்த மகவிற்கா
வுயர்ந்த சதுரா ரணந்தேடித்
துள்ளிற் பொலிந்த கோலமென்றே
துதித்து முகமன் கூறுவபோற்
சுரும்ப ரார்ப்பத் தண்பனிநீர்த்
துளியா லலைந்த களையாற்றும்
வள்ளிற் பொலிந்த திருநல்லூர்
வளரும் வாழ்வே வருகவே
வாகை சூடும் வாழவந்த
வல்லீ வருக வருகவே (8)

சொல்லிற் பொலிந்த கங்கணஞ்சேர்
சூலக் காஞர் மனமகிழ்ந்து

துய்க்கும் வாழ்க்கைத் துணையேவின்
சுவைகுன் ருக்கற் பகக்கனியே

வில்லிற் பொலிந்த மணிவிளக்கே
வேதத் தெளிவாம் விழுப்பொருளே

வீக்குங் காஞ்சி தளர்மருங்குன்
மெலிய கொடியே யாரமுதே

மல்லிற் பொலிந்த புதுமலரே
மயங்கா தடியே னுளக்கோயில்

வந்து புகுந்த தெய்வீக
மானே யருட்கோர் வைப்பிடமே

மல்லற் பழனஞ் செறிந்தநல்லூர்
வளரும் வாழ்வே வருகவே

வாகை சூடும் வாழவந்த
வல்லீ வருக வருகவே (9)

ஈச னிடப்பா கத்திலுறை
யிறைவீ வருக முத்தமிழின்

இசையே வருக கருணைமழை
யெழிலீ வருக வடியர்பந்த

பாச மகற்றி யருள்பெருக்கும்
பண்பே வருக தெவிட்டாத

யாகே வருக வெங்குநிறை
பவளே வருக தகரவிரை

பூசுங் குழலாய் வருகவிளம்
பூவை வருக வின்சொலுரை

புரியு மெழிலஞ் சுகம்வருக
புனித வதியே வருகநீர்

வாச மலர்ப்பூம் பொழினல்லை
வளரும் வாழ்வே வருகவே

வாகை சூடும் வாழவந்த
வல்லீ வருக வருகவே (10)

## அம்புலிப் பருவம்.

சொம்பொன்று மலையிற்பி றந்திடுத லாற்பரவு
சோதிமணி மேகலையி னுற்
றாயமீன் றன்கட்கு லாவலாய் வல்லையிற்
றோன்றிநகை யேயடுவ ரலால்
நம்பொன்று பெருமானை யாகத்த ணைத்தலா
னவில்வேட னக்குவகை யே
நல்கிபெற் குடையாகி நிற்குநன னீர்மையா
னன்றுநிக ராதலேகசிக்
கொம்பொன்று நுண்ணிடைநு டங்கநின் றன்னையே
கொம்மெனச் சாமசைத்தே
குளிர்முகம லர்ந்துபல தரநோக்கி யன்பொடுங்
குழையினயெ திர்ந்துபொருதும்
அம்பொன்று விழியம்மை வம்மெனவ ழைத்தலா
லம்புலீ யாடவாவே
அருமறைத ழைந்தநலை வரும்வாழ வந்தவளொ
டம்புலீ யாடவாவே (1)

இன்புபூண் டணிநகைம னேன்மணியி வட்கார்வ
மெய்த்தவள் தலையினுனே
எழில்பெறத் தானவத ரிக்குமெழு நாவினிடை
யிசையுற் வுதித்ததோர்ந்தோ
என்புபூண் டிடுதலப் பொடியாடு மிறையவ
ரிருந்தண் சடைட்விக்கண்
இருந்தநல் லுறவுதண் டேர்தன்மெ முழம்பன்மல
ரிதயங்கிழ் வ்ட்யவமைநாள்
வன்புபூண் டங்குபூ ரணையெனவ ழைக்கநீ
வந்நின் றிமையநின்றோ
மாசிலா விவளருட் கைம்மாறு நல்கியனே
வாழ்விக்க வோவென்னவோ
அன்புபூண் டெமதன்னை வம்மெனவ ழைத்தனா
லம்புலீ யாடவாவே
அருமறைத ழைந்தநலை வரும்வாழ வந்தவளொ
டம்புலீ யாடவாவே (2)

போற்றிநெகி-ழன்பினலர் தூற்றிபடி யவர்கணீர்
பொங்கிடுத வாங்கமாகிப்
போதலய மாகின்ற வொள்ளொளியு ளேகண்டு
பூரித்து ளேயொடுங்கும்
நீற்றெழில்பி றங்குமெம பெருமான்ச டாடவிபி
னீசிறி திருத்தலன்றி
நிலையாக விவள்போலவ் வடிவினிற் சமபாக
நீபெற்றி ருந்ததுண்டோ
ஏற்றமுந் தாழ்வுஞ் சொலப்புகுங் காலிவட்
கெள்ளளவு மிணைபெறுதியோ
எமதன்னை நின்னைவிட மிகவதிக மென்பதற்
கினிவேறு சான்றுமுளதோ
ஆற்றன்மிக் கவளுனைய ழைத்தலா னழகிதோ
வம்புலீ யாடவாவே
அருமறைத ழைந்தநலை வரும்வாழ வந்தவளொ
டம்புலீ யாடவாவே (3)

கன்னியிவ ளருணிலா வெங்க ணும்வி யாபித்த
காட்சியே காட்சிகண்டாய்
கதிர்மதிக் கடவுளென நின்னையுல கத்தேத்து
காரணநி கழ்த்துவேமேற்
றுன்னியெழு மிவடிருமு கச்செவ்வி தனினுண்
டுகட்டுணைக வர்ந்துவைத்த
சுயசுகிர்த சத்தியின் செயலினு லல்லவோ
சொல்லினின் செயலுமுளதோ
தன்னிகரி லாதவிற் பன்னியிவ ளுறைவிடந்
தானலாற் பிறவுமுண்டோ
சந்தோட மாவுனைய ழைக்கநீ முற்செய்த
தவமென்கொ லோவறிகிலேம்
அன்னமனை முன்னமனை வென்னமனை மனைவியுட
னமபுலீ யாடவாவே
அருமறைத ழைந்தநலை வரும்வாழ வந்தவளொ
டம்புலீ யாடவாவே (4)

வழிவழிய தாய்வருங் குலமுதல்வ னிவனென்ன
மகிழ்வோ டுளத்தெண்ணியோ
மற்றுனக் கற்றைநா ளேதொடுத் திற்றைவரை
மருவுகுரு சாபநீக்கிப்
பழிபழியெ னச்சொலுங் காளகோ ளரவாற்
படுஞ்சமுக் கைப்போக்கவோ
பரமர்சடை முடியில்வாழ்க் கைக்கிதவி ரோதிதிரி
பதகைகூட் டுறவுபெற்றுக்
கழிபவினை னத்தெரிந் தேமுற்று மச்செய்கை
கருதாத வைப்பதரிதே
களிந்தசெங் கனிநழுவி யேபாலில் வீழ்தலிது
கழறினின் பாக்யமலவோ
அழகிற்ப சுங்கிளிப் பாண்டிப்பி ராட்டியுட
னம்புலீ யாடவாவே
அருமறைத லைந்தநிலை வரும்வாழ வந்தவளொ
டம்புலீ யாடவாவே (5)

எல்லாக்க லைக்குமிவ ளேசமாட்டி யென்றறிதி
யீரெண்க லைக்குடையனு
மிருந்துநா ளுக்குநா ளேகுறைந் தொழிவையின்
னிவர்கலைய னுவையல்லாற்
சொல்லாநெ றிக்கலைக ளெக்காலு நிறைவுறக்
குறைவின்றி யிவடனைப்போற்
குவலயத் துதிபெற்று நீடூழி வாழ்தியோ
கோளரவி னுக்குடைதியே
வல்லான வக்கோள ராவையெழின் மருவுசிறு
வரிவிரற் காழியாக்கும்
வல்லபமு ணர்ந்தாயி லைப்போது முனதுமெய்
வருத்தந்த விர்ப்பள்கண்டாய்
அல்லலேன் படுதிநீ யனையுனைய ழைத்தலா
லம்புலீ யாடவாவே
அருமறைத லைந்தநிலை வரும்வாழ வந்தவளொ
டம்புலீ யாடவாவே (6)

பஞ்சுமஞ் சுஞ்சிறிய வடிகன்ற நுண்ணிய
பரற்கல்லு றுத்தநோவு

பாராது மறுகில்வந் துன்னையே நோக்கியிரு
பதுமமென் கைகணீட்டிக்

கெஞ்சிநின் றுவலொட ழைக்கநீமதியாது
கெருவித்தி ருப்பைகொல்லோ

கிருபாநி திக்கிறைவி யெமதாட்டி சீறிடக்
கேட்டுனது கரவாழியாம்

வெஞ்சுருட்ட ராவினைக் கண்டஞ்சி ஞனெளியன்
மேலுநிற் கெதிராவனோ

விளையாட வவனோடி வருவன்பொ றுத்தியென
விநயநய மொழிகூறியே

அஞ்சாது தப்புவித் தேமினியெ மைச்சிறு
மம்புலீயாடவாவே

அருமறைத ழைந்தநிலை வரும்வாழ வந்தவருளா
டம்புலீ யாடவாவே (7)

கொக்கிறகு தும்பையம் பொற்கொன்றை நதியறுகு
குளிராத்தி வன்னியரவு

குடிகொண்ட முடிலத்தி னெந்தையா ருனைவைத்த
கொள்கையினை யறியாமலப்

பக்கமும றந்தற்ப ஞகியே தூடணை
பகர்ந்திடுங் கொடியனான

பாதகன் கெடுவானெ னப்பெயர்ப டைத்துநற்
பரமநிலை பெறவெண் ணுமத்

தக்கன்யா கத்துதவு மவியுணச் சென்றமிவ
டனையனும் வீரபத்ரன்

தாளினுற் றேய்க்கநீ பட்டபா டுன்னினுற்
றப்பவொரு வழியுமில்லை

அக்கணிம ணிக்கணிசெய் சற்குணிக யற்கணியொ
டமபுலீ யாடவாவே

அருமறைத ழைந்தநிலை வரும்வாழ வந்தவளொ
டம்புலீ யாடவாவே (8)

தன்னையன் றீன்றநற் றாயின்மன மேமிகச்
சடைவுறவு னுடனுதித்த

தங்கையுன் னைக்கண்ட வளவினிலி வன்றனது
தாய்தனக் காகாதவன்

இன்னிலத் தார்க்காவ னெனவவடன் வீட்டொளித்
தெதிர் பார்த்த லும்பர்வமென்

றிதழ்க்கதவ டைப்பநின் றாயதாவு மன்றியவ்
விரவிகிர ணக்கைகளாற்

பின்னமில் லாதெடுத் துண்டுநீக் கிருள்கொண்டு
பின்னவனை திர்ப்படிலுருப்

பிரிவைமதி யிலிநின்னை முழுமதியெ னக்கழறல்
பேதைமைத் தன்றோசொலாய்

அன்னைதனை யனுகின னன்னயம் பெறுதியா
லம்புலீ யாடவாவே

அருமறைத ழைந்தநிலை வரும்வாழ வந்தவளோ
டம்புலீ யாடவாவே (9)

மங்கலம் புனைபாண்டி நாட்டரசி யிவளாநண்
மடைக்கடைக் கண்ணினோக்கம்

மணமகிழ வெஞ்ஞான்று கிட்டுமென வெப்போது
மாறாத் தியானமுற்றே

சங்கலம் புனைசதா சிட்டரா யெண்ணிலர்
தவிப்பதும றிந்திலாயோ

தாயினு மன்புடைய ளுன்றனைய ழைக்கநீ
சற்றுந்தெ ரிந்தாயிலை

தொங்கலம் பிடுகுழற் கோதையிவள் வெகுள்வளேற
குளிர்சர்வ லோகார்தமுங்

குன்றவொரு நொடியினிற் சாம்பரா மப்புறங்
கூறினின் கதியென்னவாம்

அங்கலம் படுவைதா மதியேலி னிப்புகலென்
னம்புலீ யாடவாவே

அருமறைத ழைந்தநிலை வரும்வாழ வந்தவளோ
டம்புலீ யாடவாவே (10)

## அம்மானைப் பருவம்

விலைவரம்பறிபாத கோமேத கத்தின
விசித்திரம தாவெங்கணும்
விளங்கொளிது ளங்கத்தி ரட்டிச்ச மைந்ததென
வெண்ணித்தி லத்தினேடு
கலைமுதற் செம்பவ்ள மம்பொன்னில் விக்கிதங்
காணக்கு யிற்றினதெனக்
கருதரிய பரிமள சுகந்தவிள மலர்கொடு
ததித்தசெண் டெனமாகமேற்
சிலையென்ன வேடன்னி றத்ததாய்க் கண்டபேர்
சிந்தைகவ ருங்கவினதாய்ச்
செங்கைகொண் டோச்சிப்பி டித்தெறித லைடையருச
சிறியனேன் பிறவிவேலை
அலைகள்போன் மேன்வருவ தும்போவ தாந்தன்மைய
வம்மானை யாடியருளே
அரிபிரமர் பணியநலை வரும்வாழ வந்தவுமை
யம்மானை யாடியருளே. (1)

தத்தியெழு வித்துரும வம்மனைமை யம்மையீ
தலைநிமிர்ந் திமையாதுபூந்
தளிர்க்கரம தாற்சேணி னிடையெறிந் தவைவருந்
தருணந்தெ ரிந்துபற்றத்
துத்தியமி குங்கரம் விரித்தேந்தி யர்வலது
தோன்றநின் றிடுதோற்றமே
சோதிவிண் மணிகண்டி னிதழ்விரிந் தலர்கின்ற
துணையம்பு யங்களேய்க்குஞ்
சித்தனெழ் பெருமான கத்தெழுதி வைத்தசிற்
சித்திரசொ ரூபமயிலே
சேடியர்க ளிற்றலைமைபூண்டவலை மகளுநற்
செம்மணியி னம்மனையெலாம்
அத்தமத னலெடுத் ததவவெந் தலைவியே
யம்மானை யாடியருளே
அரிபிரமர் பணியநலை வரும்வாழ வந்தவுமை
யம்மானை யாடியருளே. (2)

தேங்குழலை யங்கற்ப கச்சோலை யென்னவுஞ்
சேவித்து நிற்குமாவைத்

தேனுவென வுந்திடச் சிந்துரனை மாய்வித்த
சிந்தூர நுதலெந்தையை

வாங்கருங் கிம்புரிக் கோட்டுவா வென்னவும்
மதித்துமா வளமிகுத்த

வச்சிரச் செங்கையிந் திரனுட்டி ருந்தநா
மரைசங்க வடிவநிதிகள்

ஒன்றுகிரு பாநோக்க முடனடுத் தோர்க்குதவு
முன்கைவள் ளன்மைநோக்கி

உபயபத மலர்பணிந் தத்தன்மை கற்பா
னுவந்தோடி வருதலேய்ப்ப

அங்காசை யரயந்ந லாரெடுத் தேயுதவு
மம்மானை யாடியருளே

அரிபிரமர் பணியநலை வரும்வாழ வந்தவுமை
யம்மானை யாடியருளே (3)

சுந்தரிகி ரந்தரிசு தந்தரிவ ரந்தரு
சுமங்கலை பவானியேக

சுத்தசை தன்யமே யென்றெண்ணி றந்தவுன்
சுகிர்தநா மம்புகன்றே

சிந்தையுலை யனலின்மெழு காவுருக நினைவினுற்
றேகஞ்சி லிர்ப்பவாறுத்

திகழ்கணீர் பெருகநிறை யன்பினுன் மூர்ச்சித்த
சிவசமய வடியர்கட்கே

வந்தமுத மூட்டிப்புன் முறுவல்கோட் டிக்கருணை
மழைபொழிந் தேதெளித்து

வாழ்வித்த வன்னையே மதியுட்க ளங்கமொடு
மறைவதன வபிராமியே

அந்தரு கந்தாசி கூறிமண மலர்தூவ
வம்மானை யாடியருளே

அரிபிரமர் பணியநலை வரும்வாழ வந்தவுமை
யம்மானை யாடியருளே (4)

இச்சைகூர் தருமின்னு யிர்த்துணைச் சேடியர்க
ளிற்சிலர்ப னீர்தெளித்தே

இருபுறமொ துங்கிநிற் கச்சிலரொ ழிற்சிவிறி
யேந்திவீ சக்களை தவிர்ந்

தச்சிதம தாநின்று விளையாடல் கண்டுகண்
டுள்ளங்க ளித்தன்னையே

உன்றனையு மதிதுரித மாய்விண்ணி ழிந்துவரு
மூலவிலம் மாணைகளையும்

நிச்சலத் துடனோக்கி வானரம் பையரென்ன
நிமையாது தலைநிமிர்ந்து

நேயமொடு கொங்கைகளெ ழுந்தமிர்த முந்தா
நிவந்துபுள கெழுவிரும்பி

அச்சினில் வகுத்தபொற் பாவைபோற் சிலர்நிற்க
வம்மானை யாடியருளே

அரிபிரமர் பணியநலை வரும்வாழ வந்தவுமை
யம்மானை யாடியருளே. (5)

கையினின் றெறிபம்ம ணைக்குழாத் ததிகவித
கதிர்கொண்டு விரைவினோடு

கருதரிய தமனியமு மரகதமு முன்வரக்
கனதுவர்மு தற்பின்வ ருதல

வையகம ளந்தமா லுங்கமல போதனு
மற்றவர்த மனைவியர்களும்

வாசவனொ டுந்தேவர் சூழவெம தன்னையே
வரதிநின் சீறடிபணிர

துய்யவே வரன்மான வம்மைநீ யிமையாம
லுயர்கரம்வி ரித்துநிற்றல்

ஒன்றுக்கு மஞ்சாதிர் நீவிரென வருமேணுக்க
முற்றபய வரதமேய்ப்ப

ஐயரிம தர்க்கணிகு ளையரெடுத் தேயுதவ
வம்மானை யாடியருளே.

அரிபிரமர் பணியநலை வரும்வாழ வந்தவுமை
யம்மானை யாடியருளே (6)

வேறு.

புயலென மைத்தக ரளகம தைக்களி
புனமயி லற்புடனே

புளிமிக வுற்றிடு சிறையைவி ரித்தடி
புடைபெய ரச்சிறிதே

பெயலைநி னைத்துநின் னியலைநி னைத்திது
பெரிதென வுட்கினவாய்ப்

பிணிமுக முற்றிட வணநிரை யுத்தமி
பெடைநடை கற்றலசித்

துயரமி குத்துடன் முழுதும்வெ ளுத்துறு
தொடர்சிறை யுட்படவே

துணையடி தத்தடி கொடுநட னக்குயில்
சுவைமது ரக்கனியே

அயிலைவெ ருட்டிய விழிநலை நிர்க்குணி
யாடுக வம்மனையே

அண்டமு மெண்டிசை யும்புகழ் கொண்டவ
ளாடுக வம்மனையே (7)

சுருளின்மு டித்தொளிர் மலர்களி டத்தெழு
சுவைநற வைப்பருகிச்

சுருதியெ டுத்தொலி ஞிமிரைய டக்கிய
துகளறு மைக்கணியே

மருளொடு பட்டுழ லுயிர்கள்க தித்தெழ
மறையின டித்தவளே

மடலவிழ் கற்பகம் வளர்கத லிக்கனி
மருவுத னிச்சுவையே

குருளைக டித்துண வரிகள்ப றித்தெதிர்
கொடுதர வற்புடனே

குதிகொளும் விட்டொரு பொழினலை யுற்றிடு
குலமலை பெற்றவளே

அருளைவி தைத்தடி யவரைவ ளர்த்தவ
ளாடுக வம்மனையே

அண்டமு மெண்டிசை யும்புகழ் கொண்டவ
ளாடுக வம்மனையே (8)

விகசித சித்திர வளையல டுக்கலர்
மேவிம ணங்கமழ

விளரிமி ழற்றளி யினமது மொய்த்தலர்
மீதுவி ழுங்தெழல்போன்

மிகவொளிர் முத்தணி யமனையெ டுத்துயர்
மேலுல கேறிடவே

விரைவொடு விட்டவை வரவெதிர் பற்ற
விரும்பி விளங்கிடுவோய்

செகதல னைக்குடை நிழலில டக்கிய
செழியனி ளங்குமரி

திருவடி யைத்தினம் வழிபடு நற்றவர்
செயிரறு மற்புதமே

அகமகிழ் வுற்றிட நலைவளர் பெற்றிய
ளாடுக வம்மனையே

அண்டமு மெண்டிசை யும்புகழ் கொண்டவ
ளாடுக வம்மனையே (9)

பணைமுலை மடமயி லியலிய ரளியொடு
பரவச முறவிதமே

பரிவொடு பகரவ டுத்தவ ரம்மனை
பலவுமெ டுத்தாட

இணையிலை யெனவுன தனைசெவி லியருட்
னிதயம கிழ்ந்தாட

இருள்கெட மிளிர்பிறை மவுலிய ரெகிரி
லிருந்துமு கந்தாட

துணைபெறு பதமல ரணிபரி புரமணி
சுரமொடி சைந்தாடத்

துதியடி யவரா கரவென வறைமுறை
சுகவழி யருள்பாட

அணைவள நலைநக ரிசையுற வளர்பவ
ளாடுக வம்மனையே

அண்டமு மெண்டிசை யும்புகழ் கொண்டவ
ளா டுகவம்மனையே (10)

## நீராடற் பருவம்.

வாசமிகு மான்மதம ணிந்தப்பு யத்தினில்
வழங்குமா வனமேந்தலால்
வாரணங் கொடுதிரைக ளள்ளிமரு வலர்சூழ
வந்துமு னிறைந்தேறலாற்
றேசுலவு கொடிமகர மும்படைத் திடுதலாற்
சேர்ந்தவரை யாற்றுநீரால்
தெள்ளியத மிழ்க்கூட லுண்மைபெற நிற்றலாற்
றெய்வதன் னிலையுமுறலான்
மூசுவரி வண்டாட வேம்பார மைத்தலான்
முந்துபரி வாரமுறலான்
முன்னுறத் தந்தாவ ளத்தினிற் சென்றெவரு
முறையொடு வணங்கிவரலால்
வீசுபுகழ் செழியனவன் றுதைநிகர் வைகைநதி
வெள்ளநீ ராடியருளே
வேழவயல் சூழ்நல்லை வாழவந் தம்மைபுது
வெள்ளநீ ராடியருளே (1)

பல்வாறு முன்றேதி ரிந்தும்ப ரந்துநற்
பதநதிக ளாடியோடிப்
பக்குவமி லாதபுன் னீரவாகிப்பின்பு
பரிவுடன டங்கியெவருங்
குலவியுண் ணீரென்ன வாவலொடுபின்செலக்
குளிர்படிக மாத்தெளிந்து
குவைமலரெ டுத்தால யத்தருகு சென்றலைக்
கொடுகாத் தாற்றாவியே
தலையெழக் கண்ணீர ரும்பவீ ரப்பயிர்
தழைத்திடப் பரவையின்பாற்
றனிமையொடு செல்லுநீர்ப் பதியொடுக லக்குநந்
சார்பினு லன்பரேய்க்கும்
விலகாத வையையந் தண்டுறைய டைந்தினிது
வெள்ளநீ ராடியருளே
வேழவயல் சூழ்நல்லை வாழவந் தம்மைபுது
வெள்ளநீ ராடியருளே (2)

தொடியுலாஞ் செய்யகை துவர்த்தசெவ் வாய்கனித்
தோழியர்கு டைந்தெழுந்து

தோன்றிபமு காரவிந் தத்தினைம றைத்திடுஞ்
சுரிகுழல்வி லக்கிநின்று

கடியுலாந் தனபார மீதுவர் தலைபொரக்
கடுகிச்சி னந்தணிரைக்

களபகுங் குமபார தனதோணி யுந்தியக்
கடிமலர்க ளாச்சிதைத்துக்

கொடியுலா நுண்ணிடைது வண்டாட நீந்திவந
கொள்கையைப ணங்கணோக்கிக்

கூடவென் றோடாட வருதியென் றன்புடன்
கூவிவிரை வாப்பின்செல

வெடியுலாங் கோதைமா தரசிநீ வையைநதி
வெள்ளநீ ராடியருளே

வேழவயல் சூழ்நல்லை வாழவந் தம்மைபுது
வெள்ளநீ ராடியருளே. (3)

புற்புதமெ னக்கொங்கை வரிசைகா ட்டித்தவம்
புரிபவர்க டினமடியிலே

போற்றிசெய வேகொண்ட பருவமட வியரான
பூமாது முதலிகுளைமார்

அற்புதம தாயருகு நின்றொருவ ரோடொருவ
ரங்கையா னீரிரைத்தே

அலங்கலா லோச்சவுண் மூழ்கியும் பின்னெழுந்
தாவலொடு நீந்திவந்தும்

பற்பலவி தத்துமீ னுலவிடக் கண்டரும்ப்
பரிவினுட னதிசயித்துப்

பாருலகி லமுதமுங் கண்ணுடைய தோவென்று
பார்த்துவிளை யாடிநிற்க

வெற்புதவு குமரிநீ மகிழ்வாக வையைநதி
வெள்ளநீ ராடியருளே

வேழவயல் சூழ்நல்லை வாழவந் தம்மைபுது
வெள்ளநீ ராடியருளே. (4)

பசியமென் சைவலக் கொத்தோடு மைக்கரும்
பணைமழைவி லோதமாட

பரிமளசு கந்தமலர் மாலைநற வுண்டினிய
பண்பாடி வண்டராட

ஒசியுநுண் ணிடையாட நிறைகலா நிதிபவ்வ
முற்றெழு முந்துவரல்போல்

ஒளிர்முகமெ ழுந்தாட வள்ளையஞ் செவியாட
வுவமையறு குழைகளாட

அசிவிகர்த ருங்கரும் குவளைசெங் குவளையென
வரிவிழிகு ளிர்ந்தாடிட

அலருசெங் குமுதவாய் வெண்குமுத மாகியே
யஞ்சுக வின்மொழிகளாட

விசிறியென வெண்டிரைக ளாடநீ வையைநதி
வெள்ளநீ ராடியருளே

வேழவயல் சூழ்நல்லை வாழவந் தம்மைபுது
வெள்ளநீ ராடியருளே; (5)

வேறு.

அங்கத் துயிரைத் தழுவியமும் மலத்தா கத்தா
லஞர்வெய்தி

அலைந்து தான்முற் செய்ததவத் தளவா லறிவின்
சற்கருமத்

துங்கத் துடனே சென்றருட் சுகவா ரியினைக்
கண்டவுடன்

சோர வருத்தி வருமமலச் சோக தாக
நீங்கியன்பாய்

எங்கட் கமிர்த சஞ்சீவி யென்றென் றேத்தி
யுள்ளுருகி

இரங்கித் திளைத்தா டன்பர்கட்கே யிதயமகிழ்வா
யருண்மணியே

பொங்கித் ததும்பி வரும்பொருனைப் புதுநீ ராடி
யருளுகவே

பொற்பார் நல்லைவாழ் தற்பரியே புதுநீ ராடி
யருளுகவே (6)

தேவர் மகிழ்ந்து தூவு மலர் திகழுமகரந்
தப்பொடியுஞ்
சிலைவே னுதற்கண் மங்கையர்க டிமிர்ந்த களப
முங்குழலிற்
ருவின் மணக்கு மியன்மணமுந் தண்ணார் மரக
தச்சோதி
தழைக்குந் திருமே னியின்மணமுந் ததும்பிச் செறிந்து
தலைமயங்க
ஆவித் துணையே வருள்வடிவே யனைத்தும் பொன்றி
னுமபொன்று
தாளர்க் கருண்மங் கலநாணீ யடுத்த மீன்பு
லான் மாறிப்
பூவிற் பொலியும் பொருனைநதி ப்புதுநீ ராடி
யருளுகவே
பொற்பார் நலைவாழ் தற்பரியே புதுநீ ராடி
யருளுகவே. (7)

வங்க வாரி யிற்படிந்து மழைநன் னீரைப்
பொழிவதுபோல்
வலிய விரும்பும் பரிசனவே தியினுற் பைம்பொ
னுவதுபோன்
மங்கை யுமைநீ குடைந்திடுநன் மாண்பா லுயர்
மாதீர்த்தமென
வானத் தமரர் நாகரொடு மனித்தர் நெருங்கி
வந்துதத்தஞ்
சங்கை தீரக் குடையவவர் தந்தீ நீரை
நன்னீராத்
தந்தின் னிலத்திற் பிறப்பறுத்துத் தானுய் விளங்கிச்
சுகவெள்ளம்
பொங்கித் ததும்பி வரும்பொருனைப் புதுநீ ராடி
யருளுகவே
பொற்பார் நலைவாழ் தற்பரியே புதுநீ ராடி
யருளுகவே. (8)

அந்நாட் டனித்துப் பகீரதன்செய் யரிய தவத்தா
லுன்கணவர்
அழைத்து மவுலி யிற்றாங்கி யன்போ டளித்த
பகீரதிபோல்
இந்நாட் டரும தெய்வீக வியலாற் றீர்த்த
மகிமையொடும்
இசையு மமிழ்தைப் போன்றுயிர்க ளியாவும் வளர்த்துக்
குடைந்தவர்தம்
பன்னாட் சென்ம வாசவினைப் பகையைக்கடிந்தா
யிரங்தோட்டுப்
பதும வீட்டிற் குடிபுகுத்தும் பரமாய்த் தாயை
விளங்கியருள்
பொன்னாட் டும்பர் புகழ்பொருனைப் புதுநீ ராடி
யருளுகவே
பொற்பார் நலேவாழ் தற்பரியே புதுநீ ராடி
யருளுகவே (9)

தொண்டர் பொருட்டு விறகாளாய்த் துணைத்தாட் கமலஞ்
சிவப்பேறச்
சுற்றித் திரிந்தும் வளையல்விற்ற சோமசுந்த
ரப்பெருமான்
அண்டர்முனிவர் செசெயவென் றுசிகூற
மிகவன்பா
அழல்சான் றாக வுனைமணந்த வன்று விருந்தாந்
தனியனாங்
குண்டோ தரனுக் கன்னமிட்டுக் குறையாத் தாகத்
தாற்றண்ணீர்
கொடுக்க வழியி லாதயருங் குறிகண் டவரே
யழைக்கவரு
புண்ட ரீகங் குலவும்வையைப் புதுநீ ராடி
யருளுகவே
பொற்பார் நலேவாழ் தற்பரியே புதுநீராடி
யருளுகவே (10)

## ஊசற் பருவம்.

மழகதிர்க் கற்றைவீ சிக்கதித் தெழுமெல்லை
வடிவிற்றி ரட்டியதுபோன்

மருவுசெம் மணியாற்ச மைத்தது ணிறுவியதில்
வயிரவாள் விட்டமிட்டு

முழுவெயினி றைந்தபன் மணிகோத்தி ழைத்திட்ட
மொய்ம்மணிவ டங்டுக்கி

மூவாத நவமணிகு யிற்றியசெ ழும்பலகை
முறையுடனி சைத்ததன்மேற்

பழுதிலாப் பட்டுமெத் தைகளணைத் தன்பொடிரு
பதுமமின் னார்களாட்டிப்

பரிவினுட னெமதன்னை நின்பெருப புகழினைப்
பாடியே பாராட்டிடப்

பொழிகருணை மழையேயு யிர்ப்பயிர்க டழையமீ
பொன்னூச லாடியருளே

பொலிவேமி குந்ததிரு நல்லவாழ வந்தவுமை
பொன்னூச லாடியருளே (1)

ஏருலவி டுங்கோடி சூரியப் பிரபைகொ
டியபற்றுபொன் னூசலின்மேல்

எந்தாயு மாமகேஸ்வரிநீயி ருந்தார்வ
மெழவாடல் கண்டாவலெய்க்

காருலவு மிமயவரை யரையனுனை நோக்கியே
கண்கள்களி கூர்ந்துநிற்பக்

காதலொடு மேனையவ ளுன்னிருக பேரழுங்
கவினகொள்ள முத்தமிட்டுச்

சீருலவி டுங்குலவி ளக்கமே யென்பொருள்
செல்வமே கண்ணுண்மணியே

தித்தித்தி டுஞ்செங்க ரும்பேயி னித்தசெந்
தேனேயெ னப்பொற்றிட

போருலவு பரசமய கோளரியை யீன்றகொம்
பொன்னூச லாடியருளே

பொலிவேமி குந்ததிரு நல்லவாழ வந்தவுமை
பொன்னூச லாடியருளே (2)

வேதனின தருண்மகிமை யாலாழி சூழுலக
மேலுலக மெங்குமொன்று

விவிதச்ச ராசரம னைத்துமுத விடமால்
வினைப்பயனை யளவுகண்டு

பேதமுறு போகாறு பலமூட்டி வைக்கப்
பிறப்பிலிறு தற்கணெம்மான்

பிழையறமு டிக்கக்க டைக்கணு லாற்றிவரு
டெண்பிள்ளை யேகிள்ளையே

பாதிமதி சூடுமப் பரமர்மன துக்கேற்ற
பாண்டிமா தேவிமகளே

பட்டமங் கைத்தலைத் தட்டமங் கையரைப்
படப்பித்த சித்திவருமோ

போதபரி பூரணமனோலய வ ராகினீ
பொன்னூச லாடியருளே

பெரளிவேளி குந்ததிரு நல்லவாழ வந்தவுமை
பொன்னூச லாடியருளே (3)

விட்பரிதி வாரிதிம் டத்துற்ப வித்ததென
மென்முடி யின் மகுடமிளிர

வெண்பிறையின் மருவெனக் கத்தூரி திலகநுதன்
மின்னகிமிர் குழையின் மலர்போல்

இட்டமுத் துக்காப்பும் வயிரநற் றோடும்
மிலங்கவெட் பூவின்ஞிமிறு

இசைந்துருக் கதனில்வயி ரேர்யநத் தொளிசெய்ய
விவர்கழுகில் வரையதென்ன

வட்டமாய் வைத்தமங்க லநாண்டு லங்கநவ
மணியணியெ லாம்புனைந்து

வானுட னையவர் வந்துவந் தித்துனது
மலரடிப ணிந்துநிற்பப்

புட்பகவி மனமென வுற்றலங் காரமுறு
பொன்னூச லாடியருளே

பெரளிமேளி குந்ததிரு நல்லவாழ வந்தவுமை
பொன்னூச லாடியருளே. (4)

மட்டிட்ட கூந்தன்மட வார்விழிம யக்கான்
மருண்டவர்க ளிணையடியிலே
மானேயெ னுருயிர்க் கினியதானே யேயென்னை
வாழ்விக்க வருதெய்வமே
பட்டிட்ட விடையாயு னக்கியா னடியெனப்
பழிபட்ட தொழில் பற்றியே
பன்முறைநி னைந்துநொந் தகமூச லாடிடும்
பாலனுனை யேயடுத்தும்
ஓட்டிட்ட சிட்டென்ன வுழலவதழ கோவின்னு
முன்பெருங் கருணைக்கு நான்
உள்ளாகு நாளெந்த நாளோவ நிந்திலே
னுளமெற்கி ரங்கியருளும்
பொட்டிட்ட நுதலிசுந் தரவல்லி யம்மைநீ
பொன்னூச லாடியருளே
பொலிவேமி குந்ததிரு நல்வாழ வந்தவுமை
பொன்னூச லாடியருளே. (5)

உருமாறி மாறிவரு பலபிறப் பும்பிறந்
தூசலா டியுமடியரே
உழலாத வண்ணமுன் றிநவுளத் தெண்ணியே
யோர்நிலைநி லாதகொடிய
கருமேய வஞ்சவன் னெஞ்சைமல ரகிதமுறு
கனமணிப் பலகையாக்கிக்
கருதரிய வறிவென்னும் விட்டமதி லுன்பெருங்
கருணையாங் கயிறுபூட்டி
மருமாலை யங்கொன்றை யாடவெம் பிறவிநோய்
மருவிடா தோடவோட
மாணிக்க முற்றமக ரக்குழைய சைந்திட
மகிழ்ந்துன்மண வாளராடப்
பொருவிலா வுன்பெருமை கொண்டாட வம்மைநீ
பொன்னூச லாடியருளே
பொலிவேமி குந்ததிரு நல்வாழ வந்தவுமை
பொன்னூச லாடியருளே. (6)

தண்ணிலாக் கான்றநவ மணிபதித் திலகுமொரு
தமனியப் பலகையின்மேற்

றங்கிநீ மரகதக் கொடிபோல சைந்தாடு
தன்மையைய றிந்தெழுந்து

விண்ணவர்க ளுடன்மகிழ்ந் தாவலொடு மெம்பிரான்
மென்முடிய சைத்துநோக்க

மிளிசமுடி மீதிலுறை நதியில்வரு தெண்டிரையும்
வெளிதவழந் துட்செல்லுதன்

மண்ணுலகி னிற்பிறந் தெண்ணரிய காலநன்
மாதவமு ஞற்றினு லும்

மாதேவி யிவ்டனக் கிணையிலமெ னக்கங்கை
மாழ்கிமறை வானதேய்ப்பப்

புண்ணியசொ ரூபியாய்த் தண்ணருள்வ ழங்குபவள்
பொன்னூச லாடியருளே

பொலிவேமி குந்ததிரு நலவாழ வந்தவுமை
பொன்னூச லாடியருளே (7)

செந்திரும டந்தையொடு தண்டமிழ ணங்குமொரு
சேரநின் றம்மையுன்றன்

சேவையுற் றக்காதி புகழூசல் பாடியே
செங்கரந் தொட்டாட்டிட

அந்தரவ ரம்பையர்க ளிற்சிலர்ப லாண்டுசொலி
யஞ்சலிபு ரிந்துநிற்க

அழகுதிக்ழ் சாமரமி ரட்டிடச் சிலர்வெற்றி
யந்தண்வெண் குடைநிழற்றச்

சுந்தரக ணேசனும் பாலசுப் பிரமணிய
தோன்றலுமு னருகினின்று

தூயதிரு விளையாடல் புரிகுவதை யருளொழுகு
துணைவிழிக ளாலேநோக்கியே

புந்தியுண்ம கிழ்ந்திடும் பூரணிப ராசக்தி
பொன்னூச லாடியருளே

பொலிவேமி குந்ததிரு நலவாழ வந்தவுமை
பொன்னூச லாடியருளே (8)

நாதவடி வாகியம காமந்த்ர ரூபிநின்
ஞாதருள் எத்துணர்ந்தா

நாடரிய மாயாவி நோதத்தில் வல்லவர்க
ணம்மனைவி யோவலாது

சீதமுகில் வண்ணனே வென்றயிர்த் திடவுந்
தெரிந்தவா றிந்திடவுமே

செய்யகெளி றனையவிரல் பத்தினுங் கேசவன
றிகழ்தசவு ருக்கடோன்றத்

தாதுகும லர்ப்பாணி வீசிமுனு லாவியெஞ்
சங்காரு மகிழநின்ற

தையலே தாரகன்மு தற்பலவ வுணரையுந்
சமர்பொருத திரிசூலியே

போதமுறு பூசுரர்க ளோதுமறை முதல்வினீ
பொன்னூச லாடியருளே

பொலிவேமி குந்ததிரு நல்லவாழ தந்தவுமை
பொன்னூச லாடியருளே (9)

சகலபுவ னப்பரப் பும்பரந் தீறினுன்
றன்பெருங் கருணைவாழ்க

சாலோக சாமீப சாரூப சாயுச்ய
சதுர்விதக் கதியும்வாழ்க

நிகிலசிவ சமயமொடு தருமநன் னெறிவாழ்க
நெடியசிலை விலியர்வாழ்க

நிதமருட் சரியைமுத னன்கும்வாழ் கப்பரவு
நினதுமெய் யடியர்வாழ்கப்

பகருமுத் தமிழ் மொழியு ருத்ராக்க மணிநீறு
பண்புடனெ நாளும்வாழ்கப்

பல்லுயிர்த் தொகுதிநனி வாழ்கமா நல்லையம்
பதிநிதிகள் பெருகிவாழ்கப்

புகலுதற் கரியவைந் தக்கரமும் வாழ்கநீ
பொன்னூச லாடியருளே

பொலிவேமி குந்ததிரு நல்லவாழ வந்தவுமை
பொன்னூச லாடியருளே (10)

நிறைந்தது.